


PRGI No. TNBIL/25/A1569

# வைகறையில் பேப்பர்பாய்

www.paperboy.biz
VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 228 31.03.2026 செவ்வாய்க்கிழமை ▸▸Chennai ▸▸Volume: 01 ▸▸Issue: 228 ▸▸Tuesday ▸▸pages 8 ▸▸Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY

## இன்றைய நாள்

செவ்வாய்க்கிழமை
(31-03-2026)
விசுவாவசு ஆண்டு, பங்குனி-17
பிறை: வளர்பிறை
திதி
திரயோதசி காலை 7.46 வரை பிறகு சதுர்த்தசி.
நட்சத்திரம்:
பூரம் பிற்பகல் 3.57 வரை பிறகு உத்திரம்
யோகம்
சித்த/அமிர்தயோகம்
ராகுகாலம்
பிற்பகல் 3.00-4.30 மணி
எமகண்டம்
காலை 9.00-10.30 மணி.
சூலம் – வடக்கு.
நல்ல நேரம் :
காலை 8-9 மணி.
மாலை 5-6 மணி.

| | |
|---|---|
| மேஷம் | வெற்றி |
| ரிஷபம் | கடமை |
| மிதுனம் | பணிவு |
| கடகம் | நட்பு |
| சிம்மம் | அன்பு |
| கன்னி | ஆதரவு |
| துலாம் | களிப்பு |
| விருச்சிகம் | பரிசு |
| தனுசு | சுகம் |
| மகரம் | மாற்றம் |
| கும்பம் | போட்டி |
| மீனம் | கடமை |

# வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல்

பிரச்சாரத்தை தொடங்கிய அரசியல் தலைவர்கள்







**சென்னை, மார்ச் 31:** கொளத்தூர் தொகுதியில் முதல்வர் மு.க.ஸ்டாலினும், பெரம்பூர் தொகுதியில் தவெக தலைவர் விஜய்யும் நேற்று (மார்ச் 30) வேட்புமனுத் தாக்கல் செய்தனர்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி வேட்பு மனு தாக்கல் இன்று தொடங்கியது. அதன்படி, கொளத்தூர் சட்டப்பேரவைத் தொகுதியில் திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் இன்று மனுத்தாக்கல் செய்தார். அவருடன் அமைச்சர் சேகர்பாபு உள்ளிட்டோர் இருந்தனர். கொளத்தூர் தொகுதியில் தொடர்ந்து 4-வது முறையாக ஸ்டாலின் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளார்.

அதேபோல், பெரம்பூர் தொகுதியில் தவெக தலைவர் விஜய்யும் இன்று வேட்புமனுத் தாக்கல் செய்தார்.

இந்தத் தொகுதியில் தவெக சார்பில் விஜய், திமுக சார்பில் ஆர்.டி.சேகர், அதிமுக கூட்டணியில் இடம்பெற்றுள்ள பாமகவின் சார்பில் ம.திலகபாமா, நாதகவின் வெற்றித்தமிழன் ஆகியோர் போட்டியிடுகின்றனர். தவெக தலைவர் விஜய் பெரம்பூர் தவிர்த்து, திருச்சி கிழக்கு தொகுதியிலும் போட்டியிடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

கொளத்தூர் தொகுதியில் திமுக தலைவர் ஸ்டாலின், அதிமுக சார்பில் சந்தான கிருஷ்ணன், நாதக சார்பில் சவுந்திர பாண்டியன், தவெக சார்பில் வி.எஸ்.பாபு ஆகியோர் போட்டியிடுகின்றனர். இத்தொகுதியில் 2011-ம் ஆண்டு முதல் மு.க.ஸ்டாலின் தொடர்ந்து போட்டியிட்டு வெற்றி பெற்று வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

த.வெ.க. தேர்தல் பிரசார மேலாண்மை பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா வில்லிவாக்கத்தில் வேட்புமனு தாக்கல் செய்தார். சிட்கோ நகர் சமுதாய கூடத்தில் உள்ள அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் மைதிலியிடம் அவர் வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் தொகுதியில் த.வெ.க. சார்பில் முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் போட்டியிடுகிறார்.

இந்நிலையில் கோபிசெட்டிபாளையத்தில் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய செங்கோட்டையன் திறந்தவேனில் நின்றபடி தொண்டர்கள் புடைசூழ வேட்புமனு தாக்கல் செய்ய வந்தார்.

கோட்டாட்சியர் அலுவலகத்தில் உதவி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் செங்கோட்டையன் தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

### காரைக்குடியில் வேட்புமனுவை தாக்கல் செய்த சீமான்

தமிழகத்தில் களம் காணும் திமுக கூட்டணி, அதிமுக தலைமையிலான என்டிஏ கூட்டணி, நாதக, தவெக ஆகிய கட்சிகள் போட்டியிடும் வேட்பாளர்கள் பட்டியலை வெளியிட்டனர்.

தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் நேற்று தொடங்கிய நிலையில், வேட்பாளர்கள் வேட்பு மனுக்களை தாக்கல் செய்து வருகின்றனர்.

அந்த வகையில், நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனு தாக்கல் செய்தார்.

## ஒரே நேரத்தில் பிரசாரத்தை தொடங்கிய மு.க. ஸ்டாலின், விஜய்!

**சென்னை, மார்ச் 31:** கொளத்தூர் தொகுதியில் வேட்புமனு தாக்கல் செய்தபின்னர் செய்தியாளர்களுடன் பேசிய முதல்வர் மு.க. ஸ்டாலின்,

"நாங்கள் 200 தொகுதிகளில் வெற்றி பெறுவோம் என்று சொன்னோம். ஆனால் அதற்கும் மேலாக வெற்றி பெறுவோம். நேற்று தேர்தல் அறிக்கை வெளியிட்டபிறகு 200 தொகுதிகளைத் தாண்டி வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை உள்ளது.

நம்ம கொளத்தூர், நம்ம ஸ்டாலின் என கொளத்தூர் தொகுதியில் நான் மேற்கொண்ட பணிகள், இனிமேல் செய்ய வேண்டிய பணிகள் குறித்த புத்தகம் அளித்திருக்கிறேன்.

திமுக மீது மக்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். நாங்கள் அமோக வெற்றி பெறுவோம்.

4 ஆவது முறையும் கொளத்தூர் தொகுதி வாக்காளர்கள் திமுக வேட்பாளராகிய என்னை அமோகமான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைப்பார்கள்.எப்போதும்போல எங்கள் கூட்டணி வலுவாக இருக்கிறது. எத்தனை முனை போட்டியாக இருந்தாலும் எங்கள் கூட்டணிக்கே சாதகமாக இருக்கும்" என்று தெரிவித்தார்.

### விஜய்

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று (மார்ச் 30) தொடங்கியது. அதனைத் தொடர்ந்து தவெக தலைவர் விஜய் வேட்புமனு தாக்கல் செய்தார். இந்தத் தொகுதியில் திமுக சார்பில் ஆர்.டி.சேகர், பாமக சார்பில் ம.திலகபாமா ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

இந்நிலையில், நேற்று காலை தவெக தலைவர் விஜய் வேட்புமனு தாக்கல் செய்தார். தொடர்ந்து ஊர்வலமாக வந்த அவர் பிரச்சாரம் செய்தார்.

தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கிய விஜய், "நம்மைப் பிடித்தவர்கள் உள்ள இடத்திலிருந்து பிரச்சாரத்தைத் தொடங்க வேண்டும் என நினைத்தேன். தமிழகமே எனக்குப் பிடித்த இடம்தான். அதனால், தமிழகத்தில் எங்கிருந்து வேண்டுமானாலும் பிரச்சாரத்தைத்தொடங்கலாம். ஆனால் நம் வீட்டின் வாசலில் இருந்து, நம் தாய் வீட்டிலிருந்து தொடங்குவது போல், பிரச்சாரத்தைத் தொடங்க முடிவு செய்தேன், அதனால் இங்கு பெரம்பூரில் இருந்து தொடங்குகிறேன்.

வட சென்னையின் அடையாளங்களான லூர்து அன்னை தேவாலயம், பிரசித்தி பெற்ற கோயில், பல மசூதிகள் இருக்கும் இந்த் தொகுதியில் பிரச்சாரத்தைத் தொடங்குகிறேன். 'உன்னை மதிக்கும் உழைக்கும் மக்கள் உள்ள தொகுதியிலிருந்து இருந்து பிரச்சாரத்தை தொடங்கு' என எனது மனம் சொன்னதால் இங்கிருந்தே தொடங்குகிறேன்.

என் நெஞ்சில் குடியிருக்கும் பெரம்பூர் மக்களே, போதைப் பொருள் புழக்கம் மிகுந்த, பெண்களுக்கு பாதுகாப்பில்லாத, ஊழல் மிகுந்த தமிழகத்துக்கு ஒன்றுக்கும் உதவாத திமுக ஆட்சிதான் காரணம். இப்படிப்பட்ட ஆட்சி நடத்திய ஸ்டாலின் இத்தேர்தலோடு விடைபெறப் போகிறார். நம் வீட்டுப் பெண் பிள்ளைகள், இரவில் கழிவறை செல்லக் கூட முடியவில்லை, மூதாட்டியைக் கூட விட்டுவைப்பதில்லை. டீக்கடையில் டீ குடிக்கச் சென்றால் கூட போதை ஆசாமிகள் வெட்டு, குத்துக்கு மக்கள் ஆளாகிறார்கள்.


இந்த தீய சக்தி திமுக ஆட்சியில் பாதுகாப்பு இருக்கிறதா?, இங்கு பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பு இருக்கிறதா?, இங்கு மக்களுக்குப் பாதுகாப்பு இருக்கிறதா?, ( விஜய்யின் கேள்விக்கு இல்லை என தவெகவின ஆர்ப்பரித்தனர்). ஸ்டாலின் ஆட்சிக்கு மக்கள் பாதுகாப்பு மீது அக்கறையில்லை. தன் குடும்பத்தின் சொத்தைப் பெருக்குவதிலேயேதான் அக்கறை.

நகராட்சி நிர்வாகத் துறை வேலைவாய்ப்பில் நடந்துள்ள ஊழல் இளைஞர்கள் மீதான அநீதி. மக்களுக்குப் பாதுகாப்பு தர இயலாத, மக்கள் மீது அக்கறையில்லாத இந்த திமுக ஆட்சியைத் தூக்கி எறிவோம்.

அதனால், கொள்ளையடித்தப் பணத்திலிருந்து அவர்கள் ஓட்டுக்குப் பணம் கொடுத்தால் அதை, வாங்கிக் கொண்டு பதிலுக்கு அவர்கள் காதில் விசில் ஊதி அனுப்புங்கள். உங்கள் மகன், அண்ணன், தம்பி, பிள்ளை என நினைத்து எனக்கு வாக்களியுங்கள். எனக்கு ஒருமுறை வாக்களியுங்கள், வாய்ப்பு கொடுங்கள்.

ஏப்ரல் 23-ம் தேதியன்று மறவாமல் வாக்களியுங்கள். ஜென் ஸீ இளைஞர்களே வாக்களிக்கத் தவறிவிடாதீர்கள். தேர்தல் நாளில் வாக்குப் பதிவு இயந்திரத்தில் விசில் சின்னத்துக்கு எதிரான பொத்தானை அழுத்தத் தவறாதீர்கள். நம்பிக்கையாக இருங்கள். நல்லதே நடக்கும்." என்று விஜய் பிரச்சாரத்தில் பேசினார்.

## ரேமண்ட் முன்னாள் தலைவர் விஜய்பத் காலமானார்



**மும்பை, மார்ச் 31:** ரேமண்ட் குழுமத்தின் முன்னாள் தலைவரும், பத்ம பூஷன் விருது பெற்றவருமான விஜய்பத் சிங்கானியா (87) மும்பையில் காலமானார்.

விஜய்பத் இறுதிச் சடங்கு நேற்று மாலை மும்பையில் நடைபெற்றது. அவருக்கு மனைவி ஆஷாதேவி மற்றும் மதுபதி, ஷெபாலி ருயியா, கவுதம் ஆகிய பிள்ளைகள் உள்ளனர். ஆண்களுக்கான ஆடைத் துறையில் ரேமண்ட் நிறுவனத்தை நம்பகமான பிராண்டாக மாற்றியதில் விஜய்பத் முக்கிய பங்கு வகித்தார். ஒரு சிறந்த விமானியான விஜய்பத் சிங்கானியா, ஹாட் ஏர் பலூனில் அதிக உயரத்துக்குச் சென்றவர் என்ற உலக சாதனையை படைத்துள்ளார்.

## வாக்குப்பதிவு நேரம் என்ன? அரசாணை வெளியீடு!



**சென்னை, மார்ச் 31:** தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு காலை 7 மணி முதல் தொடங்கும் என்று திங்கள்கிழமை அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் ஒரே கட்டமாக ஏப்ரல் 23 ஆம் தேதி நடைபெறவுள்ளது. இன்று முதல் வேட்புமனுத் தாக்கல் தொடங்கியுள்ளது. ஏப்ரல் 6 ஆம் தேதி வேட்புமனுத் தாக்கல் செய்ய கடைசி நாளாகும்.

வேட்புமனு பரிசீலனை ஏப்ரல் 7 ஆம் தேதி நடைபெறவுள்ளது. வேட்புமனுவைத் திரும்பப் பெற ஏப்ரல் 9 கடைசி நாளாகும்.

இந்த நிலையில், வாக்குப்பதிவு நாளான ஏப்ரல் 23 ஆம் தேதி காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை வாக்குப் பதிவு நடைபெறும் என்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்கெனவே, வாக்குப்பதிவு நாளான ஏப்ரல் 23 ஆம் தேதி தமிழ்நாடு முழுவதும் பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு, கேரளம் உள்பட 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை மே 4 ஆம் தேதி நடைபெறும்.

## 21 மாநிலங்களில் மீண்டும் மண்ணெண்ணெய் விநியோகிக்க மத்திய அரசு அனுமதி

**புதுடில்லி, மார்ச் 31:** வீடுகளுக்கு மண்ணெண்ணெய் விநியோகத்தை எளிதாக்குவதற்காக, மத்திய அரசு பெட்ரோலியப் பாதுகாப்பு மற்றும் உரிம விதிமுறைகளைத் தளர்த்தியுள்ளது.

மார்ச் 29 ஆம் தேதி மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் வெளியிட்ட அறிவிப்பின்படி,

மண்ணெண்ணெய் பயன்பாடே இல்லாத பகுதிகளாக அறிவிக்கப்பட்ட தில்லி, ஹரியாணா, உத்தரப் பிரதேசம் மற்றும் குஜராத் உள்ளிட்ட 21 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் சமையல் மற்றும் விளக்கு எரிப்பதற்காக பொதுவிநியோக திட்டத்தில் நியாய விலைக்கடைகள் மூலம் மீண்டும் மண்ணெண்ணெயை விநியோகிக்க உத்தரவிட்டுள்ள மத்திய அரசு, பொதுமக்களின் தேவைக்கேற்ப எரிபொருள் கிடைப்பதை உறுதி செய்ய வழிவகை செய்துள்ளது.

60 நாள்களுக்கு அல்லது மறு அறிவிப்பு வரும் வரை, பெட்ரோல் நிலையங்கள் மூலம் மண்ணெண்ணெய் விநியோகம் செய்வதற்கு எண்ணெய் சந்தைப்படுத்தும் நிறுவனங்களுக்கான விதிமுறைகளில் தற்காலிக தளர்வுகளை மத்திய அரசு அறிவித்துள்ளது.

இந்தத் தளர்வுகளின் ஒரு பகுதியாக, பொதுத்துறை எண்ணெய் சந்தைப்படுத்தல் நிறுவனங்களால் இயக்கப்படும் தேர்ந்தெடுக்கப்பட்ட பெட்ரோல் நிலையங்களில் அதிகபட்சமாக 2,500 லிட்டர், மாநில அரசுகளால் தேர்வு செய்யும் மாவட்டத்திற்கு 2 பெட்ரோல் நிலையங்களில் 5,000 லிட்டர் வரை மண்ணெண்ணெயை சேமித்து வைக்க அனுமதிக்கப்படும்.

மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேச நிர்வாகங்களால் அடையாளம் காணப்பட்ட குறிப்பிட்ட விற்பனை நிலையங்களுக்கு மட்டுமே இந்த விநியோகம் அனுமதிக்கப்படும்.

மேலும், சமையல் மற்றும் விளக்கு ஏற்றுதல் போன்ற வீட்டு உபயோகத்திற்கு மட்டுமே மண்ணெண்ணெய்வழங்கப்படும் என்றும், பெட்ரோலியம் மற்றும் வெடிபொருள் பாதுகாப்பு அமைப்பால் வெளியிடப்பட்டுள்ள பாதுகாப்பு நெறிமுறைகள் மற்றும் செயல்பாட்டு வழிகாட்டுதல்கள் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என கூறப்பட்டுள்ளது.



## திருக்குறள் ஒப்பிவித்தல் போட்டி



நாகப்பட்டினம் மாவட்டம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி அந்தணப்பேட்டை ஏழாம் வகுப்பு மாணவன் கோ அதிபன் மாவட்ட அளவில் நடைபெற்ற திருக்குறள் ஒப்பிவித்தல் போட்டியில் வெற்றி பெற்று மாவட்ட ஆட்சியர் அவர்கள் பாராட்டி பள்ளிக்குபெருமை சேர்த்துள்ளார் அவரை ஆசியர்கள் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் வாழ்த்தினார்கள்

## தங்க மோதிரம், ராயல் என்பீல்ட் பைக்: நிர்வாகிகளுக்கு வாக்குறுதிகளை அள்ளி வீசிய அதிமுக வேட்பாளர்

**செங்கல்பட்டு, மார்ச் 31:**
செங்கல்பட்டு சட்டப்பேரவை தொகுதி அதிமுக வேட்பாளராக எம்.கஜா என்கிற கஜேந்திரன் அறிவிக்கப்பட்டுள்ளார்.

தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கியுள்ள அவர், தொகுதிக்கு உட்பட்ட மறைமலைநகர் காட்டாங்கொளத்தூர் கிழக்கு ஒன்றியம், செங்கல்பட்டு நகரம் உள்ளிட்ட பகுதிகளில் கட்சி நிர்வாகிகளை சந்தித்து ஆதரவு திரட்டினர்.



அப்போது பேசிய அவர், "திமுக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு, பெண்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாக உள்ளது. கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் அதிகரித்துள்ளன.

திமுக ஆட்சியில் தமிழகம் உலக அளவில் தலைகுனிந்து உள்ளது. செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் கே.பழனிச்சாமி என்னும் நான் சத்தம் ஒலித்தால்தான் இதற்கெல்லாம் முடிவு கட்ட முடியும்" என்றார்.

நான் கியாரண்டி...

மேலும், கட்சி நிர்வாகிகளை கவரும் வகையில், திமுக வேட்பாளரைவிட பாகம் அளவில் 100 வாக்குகள் அதிகம் பெறுபவர்களுக்கு கால் பவுன் மோதிரமும், 300 வாக்குகள் அதிகம் பெறுபவர்களுக்கு ரூ.3 லட்சம் மதிப்புடைய ராயல் என்பீல்ட் பைக்கும் வழங்கப்படும்.

இந்த பரிசுகளை பழனிசாமி கையாலேயே உங்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்கிறேன். அதற்கு நான் கியாரண்டி' என்றார். இதைக் கேட்டதும் கூட்டத்துக்கு வந்திருந்த நிர்வாகிகள் கைகளை தட்டி ஆரவாரம் செய்தனர்.

## அம்பத்தூர் அருகே உரிய ஆவணங்களின்றி வீட்டிலிருந்த ரூ.1.22 கோடி பறிமுதல்



**ஆவடி, மார்ச் 31:**
தமிழக சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு, வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசு பொருட்களை அரசியல் கட்சியினர் விநியோகிப்பதை தடுக்கும் வகையில், திருவள்ளூர் மாவட்ட தேர்தல் அலுவலரின் கீழ் உள்ள கும்மிடிப்பூண்டி, மாதவரம், திருத்தணி உள்ளிட்ட 10 சட்டப்பேரவை தொகுதிகளில் தேர்தல் பறக்கும் படையினர், நிலை கண்காணிப்பு குழுவினர் தீவிர கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த வகையில், அம்பத்தூர் சட்டப்பேரவை தொகுதிக்குட்பட்ட அம்பத்தூர் அருகே அண்ணா நகர் மேற்கு விரிவு, கோல்டன் குடியிருப்பு பகுதியில் நேற்று முன் தினம் இரவு தேர்தல் தேர்தல் பறக்கும் படையினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது, அவ்வழியே இரு சக்கர வாகனத்தில் வந்த இளைஞர் ஒருவர் நிற்காமல் வேகமாக சென்று, அப்பகுதியில் உள்ள வீட்டின் முன் இரு சக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு, கைப்பையுடன் வீட்டினுள் நுழைந்தார்.

இதையடுத்து, அந்த இளைஞரை பின் தொடர்ந்து சென்ற தேர்தல் பறக்கும் படையினர் வீட்டினுள் புகுந்து, சோதனை நடத்தினர். அச்சோதனையில், கைப்பை மற்றும் வீட்டினுள் ரூ.1.22 கோடி இருந்தது.

இதுகுறித்து, தேர்தல் பறக்கும் படையினர் தீவிர விசாரணை நடத்தினர். அவ்விசாரணையில் தெரிய வந்ததாவது: அண்ணா நகர் மேற்கு விரிவு, கோல்டன் குடியிருப்பு பகுதியில் வசிக்கும் மஞ்சுநாத் என்ற இளைஞர், டாஸ்மாக் மதுபான கடைகளின் விற்பனை பணத்தை வசூலித்து, வங்கியில் செலுத்தும் நிறுவன ஊழியர்.

அவர் முகப்பேர் பகுதியில் உள்ள டாஸ்மாக் மதுபான கடைகளில் விற்பனை தொகையை வசூலித்த தொகையோடு, தான் வசிக்கும் பகுதிக்கு சென்று கொண்டிருந்துள்ளார். அப்போது, அச்சத்தின் காரணமாக தேர்தல் பறக்கும் படையினர் சோதனைக்கு ஒத்துழைக்காமல் இரு சக்கர வாகனத்தில் வேகமாக சென்றுள்ளார்.

அவர் கைப்பை மற்றும் வீட்டினுள் வைத்திருந்த ரூ.1.22 கோடி டாஸ்மாக் மதுபான கடைகளின் விற்பனை தொகையாகும். இவ்வாறு அந்த விசாரணையில் தெரியவந்தது.

இருப்பினும், ரூ.1.22 கோடிக்கு உரிய ஆவணங்கள் இல்லாததால், அதனை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்து, அம்பத்தூர் சட்டப்பேரவை தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரும், பெருநகர சென்னை மாநகராட்சியின் அம்பத்தூர் மண்டல உதவி ஆணையருமான ஆர்.ஏ.பிரபாகரிடம் ஒப்படைத்தனர்.


## தாயமங்கலம் முத்து மாரியம்மன் கோவில் பெருந்திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது

**மானாமதுரை மார்ச் 31:**
சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள பிரசித்தி பெற்ற ஸ்ரீ தாயமங்கலம் முத்து மாரியம்மன் கோவிலில் பங்குனி பெருந் திருவிழா ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணிக்கு கொடி யேற்றத்துடன் தொடங்கியது. காலை சிறப்பு கணபதி ஹோமம் அதைத் தொடர்ந்து லட்சார்சனை பூஜை நவகிரக ஹோமம் வழிபாடு நடைபெற்றது.

பிரசித்தி பெற்ற பெற்ற தாயமங்கலம் முத்துமாரியம்மன் ஆண்டுதோறும், பங்குனித்பெருந் திருவிழா தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறுவது வழக்கம். ராமநாதபுரம், மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்தும் பக்தர்கள் வந்து செல்வார்கள். பக்தர்கள், அம்மனுக்கு பொங்கல் வைத்தும், ஆடு, கோழிகளை பலியிட்டும், அக்னிசட்டி எடுத்தும் நேர்த்தி கடன் செலுத்துவர். முக்கிய நிகழ்ச்சி பொங்கல் விழா ஏப்.5ம் தேதி நடைபெற உள்ளது.

6ம் தேதி மின் அலாரங்கார தேர் பவனியும், 7ம் தேதி பால்குடம், ஊஞ்சல் உற்ஸவமும், பூப்பல் லக்கு நிகழ்ச்சியும், 8ம் தேதி இரவு திருக்கோவில் தீர்த்தவாரி நிகழ்ச்சி





யுடன்திருவிழா நிறைவுபெறுகிறது. விழாவிற்கான ஏற்பாடுகளை பரம்பரை அறங்காவலர் வெங்க டேசன்செட்டியார் மேற்பார்வையில் கோவில் பணி யாளர்கள், கிராம மக்கள், பக்தர்கள் செய்து வருகின்றனர். மதுரை, மானாமதுரை, பரமக்குடி, கமுதி, அருப்புக்கோட்டை, சிவகங்கை பகுதியில் இருந்து சிறப்பு பஸ் வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## திருப்பாலைவனம் திருப்பாலீஸ்வரர் கோயில் திருவிழாவில் தேர் கவிழ்ந்து அர்ச்சகர் காயம்

**பொன்னேரி, மார்ச் 31:**
திருப்பாலைவனம் திருப்பாலீஸ்வரர் கோயில் திருத்தேர் திருவிழாவில் தேர் கவிழ்ந்து, அர்ச்சகர் காயமடைந்த சம்பவம், பக்தர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி அருகே திருப்பாலைவனம் கிராமத்தில் அமைந்துள்ளது பழமையான லோகாம்பிகாதேவி சமேத திருப்பாலீஸ்வரர் கோயில். முதலாம் ராஜேந்திரசோழன் காலத்தில் அமைக்கப்பட்ட இக்கோயில், இந்துசமய அறநிலையத் துறையின் கீழ் உள்ளது.

இக்கோயிலில் ஆண்டுதோறும் பங்குனி உத்திர பிரம்மோற்சவம் வெகுவிமரிசையாக நடைபெறுவது வழக்கம். அந்த வகையில், திருப்பாலைவனம் திருப்பாலீஸ்வரர் கோயிலில் கடந்த 23-ம் தேதி பங்குனி உத்திர பிரம்மோற்சவ விழா கொடியேற்றத்துடன் தொடங்கியது.

இவ்விழாவில், நாள்தோறும் திருப்பாலீஸ்வரர் வீதியுலா சென்று பக்தர்களுக்கு அருள் பாலித்து வந்தார். இந்நிலையில், பங்குனி உத்திர பிரம்மோற்சவ விழாவின் முக்கிய திருவிழாவான திருத்தேர் திருவிழா நேற்று காலை



தொடங்கியது.

இதில், வண்ண மலர்கள், வாழை மற்றும் துணி தோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட சுமார் 22 அடி உயரம் மற்றும் 5 டன் எடைக் கொண்ட மரத்திலான திருத்தேரில் லோகாம்பிகாதேவி சமேத, திருப்பாலீஸ்வரர் எழுந்தருளி முக்கிய மாட வீதிகள் வழியாக வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்து கொண்டிருந்தார்.

பொன்னேரி, திருப்பாலைவனம், பழவேற்காடு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த திரளான பக்தர்கள் தேரை வடம் பிடித்து இழுத்து, சுவாமி தரிசனம் செய்து கொண்டிருந்த நிலையில், நேற்று பிற்பகல் தேரோட்டம் சிறிது நேரம் நிறுத்தப்பட்டு, மீண்டும் தொடங்கியது.

அப்போது, திருத்தேர், திருப்பாலைவனம் காவல் நிலையத்தை கடந்து பழவேற்காடு சாலைக்கு வரும் போது எதிர்பாராதவிதமாக சாலையில் கவிழ்ந்தது.

இதில், தேரில் இருந்த, கோயில் அர்ச்சகரான அரவிந்த் என்கிற நாகராஜ் கையில் காயமடைந்து, பொன்னேரி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

மேலும், திருவிழா பாதுகாப்பு பணியில் ஈடுபட்ட திருப்பாலைவனம் போலீஸார், தீயணைப்பு வீரர்கள், விபத்தில் சிக்கிய தேரை மீட்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

## தேர்தல் மன்னன் பத்மராஜன் 253-வது முறையாக வேட்பு மனு தாக்கல்: மேட்டூரில் போட்டியிட மனு

**மேட்டூர், மார்ச் 31:**
தேர்தல் மன்னன் பத்மராஜன் 253-வது முறையாக தேர்தலில் போட்டியிடுவதற்காக, மேட்டூர் சட்டப்பேரவை தொகுதியில் இன்று வேட்புமனுத் தாக்கல் செய்தார்.

மேட்டூர் அடுத்த குஞ்சாண்டியூரை சேர்ந்தவர் பத்மராஜன் (65). இவர் அதே பகுதியில் பழைய லாரி மற்றும் பஸ் டயர்களை புதுப்பிக்கும் கடை நடத்தி வருகிறார். இவர் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு தேர்தலிலும் வேட்புமனுத் தாக்கல் செய்து வருகிறார். இவர் 1988-ம் ஆண்டு முதல் தொடர்ந்து 38 ஆண்டுகளுக்கு மேலாக அனைத்து தேர்தல்களிலும் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்து வருகிறார்.

இந்திய அளவில் தலைவர்களை எதிர்த்தும் தேர்தலில் வேட்புமனுத் தாக்கல் செய்து வருகிறார் இதனால் இவர் தேர்தல் மன்னன் என்ற அடைமொழியோடு வலம் வருகிறார். இதுவரை கருணாநிதி, ஜெயலலிதா, வாஜ்பாய், நரேந்திர மோடி, பிரியங்கா காந்தி, ராகுல் காந்தி, ஸ்டாலின், எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட பல தலைவர்களை எதிர்த்து போட்டியிட்டு இருக்கிறார்.




கூட்டுறவு சங்க தேர்தல் முதல் ஜனாதிபதி தேர்தல் வரை வேட்புமனு தாக்கல் செய்வதை வழக்கமாக கொண்டுள்ளார். இவரது சாதனைகள் லிம்கா புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன. இந்நிலையில், சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு தேர்தல் மன்னன் பத்மராஜன் 253-வது முறையாக மேட்டூர் கோட்டாச்சியரும், தேர்தல் நடத்தும் அலுவலருமான சுகுமாரிடம் வேட்புமனுத் தாக்கல் செய்தார்.

பின்னர், அவர் நிருபர்களிடம் கூறியதாவது : 1991-ம் ஆண்டு நரசிம்மராவை எதிர்த்து போட்டியிட்ட போது, என்னை கடத்திய போது பல்வேறு சித்திரவதைகளுக்கு ஆளாகி தப்பித்தேன். 1996-ம் ஆண்டு தேர்தலின் போது 5 மாநிலங்களில் போட்டியிட்டேன். அப்போது, ஒரு வேட்பாளர் 2 தொகுதிகளில் போட்டி போட வேண்டும் என்ற சட்டம் கொண்டுவரப்பட்டது. 254 வது முறையாக பெரம்பூர் தொகுதியில் விஜயை எதிர்த்து போட்டியிட உள்ளேன்.

2011-ம் ஆண்டு நடந்த தேர்தலில் மேட்டூர் தொகுதியில் 6,700 ஓட்டுகள் வாங்கியது எனது அதிகபட்ச வாக்காகும். திருச்சியில் நடந்த இடைத் தேர்தலில் சரத்குமாரை விட அதிகமாக வாக்குகள் பெற்றுள்ளேன். இதுவரை தேர்தலுக்காக சுமார் ரூ.1 கோடிக்கு மேலாக செலவு செய்துள்ளேன். இவ்வாறு அவர் கூறினார்.

## தாம்பரம், சோழிங்கநல்லூர், செங்கல்பட்டில் ஹாட்ரிக் வெற்றி பெறுமா திமுக? தட்டிப் பறிக்க தயாராகும் அதிமுக

**தாம்பரம், மார்ச் 31:**
செங்கல்பட்டு, சோழிங்கநல்லூர், தாம்பரம் ஆகிய தொகுதிகளில் அதிமுகவும், திமுகவும் நேரடியாக மோதுகின்றன.

இந்த 3 தொகுதிகளிலும் கடந்த இரண்டு தேர்தல்களில் திமுக தொடர்ச்சியாக வெற்றி பெற்றுள்ளது. இந்த தேர்தலில் செங்கல்பட்டு, தாம்பரம் தொகுதிகளில் திமுக சார்பில் புதியவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

சோழிங்கநல்லூர் தொகுதியில் தற்போதைய எம்எல்ஏ அரவிந்த் ரமேஷ் மீண்டும் போட்டியிடுகிறார். கடந்த 2 தேர்தலிலும் தோல்வி அடைந்த, அதிமுகவின் கே.பி.கந்தன், 3-வது முறையாக மீண்டும் களமிறக்கப்பட்டுள்ளார்.

தாம்பரம் தொகுதியில் 3 முறை எம்எல்ஏவாக இருந்த எஸ்.ஆர்.ராஜாவுக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டு, மருத்துவர் கிருத்திகா தேவி என்பவருக்கு இம்முறை சீட் வழங்கப்பட்டுள்ளது. இவரை எதிர்த்து அதிமுக சார்பில் சிட்லபாக்கம் ராஜேந்திரன் போட்டியிடுகிறார்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் திமுக சார்பில், தொடர்ந்து 2 முறை வெற்றி பெற்ற வரலட்சுமிக்கு பதிலாக, நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி தலைவராக இருந்த கார்த்



திக் என்பவருக்கு சீட் வழங்கப்பட்டுள்ளது. அதிமுக தரப்பில் கஜேந்திரன் போட்டியிடுகிறார்.

இந்த 3 தொகுதிகளையும் தக்கவைக்க வேண்டும் என்ற முனைப்பில் திமுக தீவிர பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறது. கூட்டணி கட்சிகள் பலத்துடன் திமுகவிடம் இருந்து தொகுதிகளை கைப்பற்ற வேண்டும் என்ற கணக்கில் அதிமுகவும் களம் இறங்கியுள்ளது.

பாஜக, பாமக உடன் இருப்பது அதிமுகவுக்கு பலம். திமுக வாக்குகளை நடிகர் விஜய் கட்சி வேட்பாளர் கணிசமாக பிரித்து விடுவார் என்று அதிமுக கணக்கு போடுகிறது.

உட்கட்சிப் பூசல் இருந்தாலும், 3 தொகுதிகளிலும் முஸ்லிம்கள் வாக்கு கணிசமாக உள்ளதும், விசிக உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் வாக்குகளும் தங்களுக்கு சாதகமாக இருக்கும் என திமுக கருதுகிறது. புதிய வரவான நடிகர் விஜய் கட்சியின் தாக்கம் மற்ற கட்சிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

## தமிழகத்தில் தேர்தல் பறக்கும் படையினர் சோதனையில் இதுவரை ரூ.296.40 கோடி பணம், பொருட்கள் பறிமுதல்

**சென்னை, மார்ச் 31:**
2026 தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தலை சுதந்திரமாகவும், நேர்மையாகவும் மற்றும் வெளிப்படையாகவும் நடத்துவதற்கு தங்களை தயார்படுத்திக் கொள்வதை உறுதி செய்வதே இந்தப் பயிற்சித் திட்டத்தின் நோக்கமாகும்.

அனைத்து தொகுதிகளிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ள கண்காணிப்புக் குழுக்கள், 24x7 நேரமும் தீவிரமாகக் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளன. 30.03.2026 அன்றைய நிலவரப்படி, இக்குழுக்களால் கைப்பற்றப்பட்ட பொருட்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

நேற்று (மார்ச் 30) வரை பறிமுதல் செய்யப்பட்ட விவரங்கள் பின்வருமாறு:



ரொக்கமாக ரூ.61.98 கோடியும், மதுபானம் ரூ. 1.17 கோடி மதிப்பிலும், போதைப்பொருட்கள் ரூ.8.39 கோடி மதிப்பிலும், தங்கம்/வெள்ளி போன்ற விலையுயர்ந்த உலோகங்கள் ரூ.197.35 கோடி மதிப்பிலும் மற்றும் இதர பொருட்கள்/இலவசங்கள் ரூ. 27.51 கோடி மதிப்பிலும் என மொத்தம் ரூ.296.40 கோடி மதிப்பிலான பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தாம்பரம் தொகுதி வேட்பாளர் தேர்வில் அதிருப்தி: டி.ஆர்.பாலு, ஆர்.எஸ்.பாரதி வீட்டை எஸ்.ஆர்.ராஜா ஆதரவாளர்கள் முற்றுகை

**தாம்பரம், மார்ச் 31:**
தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் களம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ள நிலையில், அதிமுக கூட்டணி, திமுக கூட்டணி, தவெக, நாம் தமிழர் கட்சியினர் வேட்பாளர்களை அறிவித்துள்ளனர்.

இதனிடையே திமுகவில் வேட்பாளர் பட்டியல் குறித்த சலசலப்புகள் எழத் தொடங்கியுள்ளன. மேலும், வெற்றி வாய்ப்புள்ள தொகுதி கூட்டணிக்கு அளித்ததும் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், தாம்பரத்தில் திமுக சார்பில் மருத்துவர் கிருத்திகா தேவி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். அந்த அறிவிப்பு சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. தாம்பரம் தொகுதியில் தற்போது எம்எல்ஏ-வாக இருக்கும் எஸ்.ஆர்.ராஜாவுக்கு மீண்டும் வாய்ப்பளிக்கக் கோரி அவருடைய ஆதரவாளர்கள் கடந்த 2 நாட்களாக தீவிரப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஏற்கெனவே 3 முறை எம்எல்ஏவாகப் பதவி வகித்த அனுபவம் கொண்ட எஸ்.ஆர்.ராஜாவுக்கே மீண்டும் வாய்ப்பு வழங்க வேண்டும் என்பது அவரது ஆதரவாளர்களின் கோரிக்கையாக உள்ளது.

இதனை வலியுறுத்தி, அக்கட்சியின் மூத்த நிர்வாகியான டி.ஆர்.பாலு மற்றும் ஆர்.எஸ்.பாரதி அமைச்சர் அன்பரசன் ஆகியோரின் இல்லத்தை எஸ்.ஆர்.ராஜாவின் ஆதரவாளர்கள் முற்றுகையிட்டனர்.



போராட்டத்தின் போது, அமைச்சர் தா.மோ.அன்பரசனுக்கு எதிராகவும் போராட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பியதால் அங்கு பரபரப்பு நிலவியது. வேட்பாளரை மாற்றிவிட்டு, மீண்டும் ராஜாவுக்கே வாய்ப்பு தர வேண்டும் என்று அவர்கள் முழக்கமிட்டனர்.

இதேபோல், தலைமை நிலைய செயலர் ஆர்.எஸ்.பாரதி மற்றும் அமைச்சர் அன்பரசன் ஆகியோர் வீடுகளையும் எஸ்.ஆர்.ராஜா ஆதரவாளர்கள் முற்றுகையிட்டனர். இதனைத் தொடர்ந்து அண்ணா அறிவாலயம் சென்ற அவர்கள் அங்கும் ராஜாவுக்கே வாய்ப்பு தர வேண்டும் எனக் கூறி முழக்கமிட்டனர்.

பின்னர் அ.ராசா அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். இதேபோல், பல்லாவரம் தொகுதி எம்எல்ஏவாக உள்ள இ.கருணாநிதி, 2016, 2021 ஆகிய இருமுறை வெற்றி பெற்றுள்ளார்.

இந்நிலையில், இந்த தேர்தலிலும் இவருக்கே சீட் ஒதுக்கப்படும் என எதிர்பார்த்தனர். ஆனால், திமுக கூட்டணியில் இத்தொகுதி தேமுதிகவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால், திமுகவினர் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர்.

## செக்யூரிட்டி கார்டுகள் தேவை

கோடம்பாக்கம் சேத்துப்பட்டு புரசைவாக்கம் கோட்டூர்புரம் பகுதிகளில் வேலை செய்ய செக்யூரிட்டி கார்டுகள் தேவை

அணுகவும்: 9840861539

## ADVERTISE WITH US

CONTACT US 9438610756

## WANTED: FEMALE ANCHORS

- Age 18 to 35
- Good Looking
- Work from Home (Full-time/Part-time)

Salary: Rs. 20,000 to 50,000

Call / Whatsapp:
7789941009
9337501889

## PLOT SALE

ORAGADAM 11L to 23L
TAMBARAM 51L to 69L
OMR 26L to 51L
ECR 52L to 75L

9626777627

## Special Invitation

to retired seniors house wives businessmen bankers CAs NRIs age.30 to 70.qualification SSLC/graduate

To restart your second Innings with a career business opportunity

- Flexible timing unlimited incentive
- No target work from home training provided

For successful business.

Contact Mr. Irudaya Raj
Ph.9486634780

## Vilambaram

We provide Targeted Leads to grow your buisness

Boost your business

Call:: 91 7789941009, 9337501889

www.vilambaram.com

## keerthi foundation

De Addiction Cum Rehabilitation Centre

INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers

Internship:
- Clinical Training
- Counseling Practice
- Case Work

Jobs:
- Social Worker
- Jr Psychologist
- Rehab Counselor

Build Your Career in De-Addiction & Mental Health Care

Call: 9841945060 | 7845027710

www.keerthifoundation.com

## WANTED

JAY SECURITY FORCE

பணி வாய்ப்புகள்

- பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
- இடங்கள்:
  - பெருங்குடி, துரைப் பாக்கம்
  - காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
  - விருகம்பாக்கம்

பெண்கள் தேவை

சம்பளம்:- 12500 முதல் 20000 வரை

9791061354 - 8072969599

Head office

NO :1, அம்பாள் அவின்யு,
வி.பி.ஜி அவின்யு, விரிவாக்கம்,
மேட்டுக்குப்பம்- சென்னை-97

## ஆட்கள் தேவை

வார சம்பளத்திற்கு

லேபர் வேலைக்கு ஆட்கள் தேவை

உணவு மற்றும் தங்கும் இடம் இலவசம்

OMR பெருங்குடி சென்னை

Contact 9790979539

## PREMIUM LAND SALE NEAR PARANDUR AIRPORT

YOU ARE LUCKY!
Grab Your Future Investment Today!

Location: Just 6 KM Near Parandur New Airport

Price Details
- ₹700 to ₹2200 per Sq.Ft
- Affordable & High Return Investment

Why Invest Here?
- ✔ Fast Developing Area
- ✔ Near Upcoming Airport
- ✔ Excellent Appreciation Value
- ✔ Suitable for Residential & Investment
- ✔ Easy Road Access

PLOTS AVAILABLE NOW!
Contact: CT. Guruji
Phone: 90031 32847

LIMITED PLOTS – BOOK NOW!

## WANTED

Site Supervisor required for construction work in Ambattur

Contact: 8428872887

## WANTED

Needed female staff to look after children, patients.

Contact 9150989424

## SEVEN STARS LOGISTICS PVT.LTD.

We Build Perfection

we simplify shipping for your business

Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.

# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com

## just499® MLM SOFTWARE

All Types of MLM Software Solutions Available

Binary Unilevel Matrix Board Generation ROI / Investment

ONLY Rs. 499

Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

## Sir Manjal Mart

YOUR DESIRE WE DELIVER

20% OFF

தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க

www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

## THE BEST CENTRE OF CAR WASH

SADHANA DEVI.K

SUPREME Car Wash & Detailing

- Car Foam Pressure Wash
- Teflon Coating
- Ceramic Wax Treatment
- Under Chassis Painting
- Interior Foam Wash / Stain Remover
- Paint Correction / Protection

We Done Here

9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com

No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.

## WANTED

M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர், வர/மாத சம்பளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift

7540003588

## அருள்தரும் தெய்வம்

தமிழ் மாதமிருமுறை இதழ்

என்றும் நம் இல்லங்களில்

www.arultharumdeivam.com

அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..


## WANTED

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact 8248951872

# கவிதை அரங்கம்!






மொழியில்
பேசிடு விழியில்
பேசி வீழ்த்தாதே

உனக்கான காத்திருப்பில்
உணர்ந்தேன்
உன்னில் நான்
தொலைந்திருப்பதை

தூறல் போடும்
மழையில்
உன் நினைவின்
சாரலென்னை
நினைத்தே செல்கிறது

சேராது
இரு திசைகளென
தெரிந்தும்
தேடி தொலையுது
விழிகள்

## வாழ்க்கை தத்துவம்...



அதிகமாகவோ வேகமாகவோ
பேசாதீர்கள் தெளிவாகவும்
சுருக்கமாகவும் பேசுங்கள்

இதுதான் சரி என்று
உங்கள் மனதிற்குள்
ஒரு குரல் ஒலிக்கும்
சற்றும் தயங்காமல்
நடைமுறை படுத்துங்கள்

ஒருவருடைய உண்மையான
அன்பை உதாசீனம்
செய்தால் ஒருநாள்
அவர்களுடைய அன்பிற்கே
ஏங்கும் நிலை வரும்

# சொல்றதக் கேளும்மா..

அம்மா என்னோட
பிரெண்ட் விநாயகி
உங்ககிட்டப்
பேசணுமாம்..
இப்போ வரேன்னு
சொல்லிருக்கா
என்றபடியே
நாற்காலியில்
உட்கார்ந்தான் குமார்.
அது
யாருடா விநாயகி?
புதுபிரெண்ட்டா?
என்றாள் குமாரின்
அம்மா தனம்.
இல்லம்மா..
ரொம்ப வருஷமாப்
பழக்கம்.. என்றான்.
ஓ அப்படிப்
போவுதா கதை?
எதுக்கு இப்போ
இங்க வீட்டுக்கு வரா?
உங்கிட்டயும்
அப்பாக்கிட்டயும்
பேசணுமாம்..
என்ன
பேசணுமாம்? என்று
கோபமாகக் கேட்டாள்
தனம்.
அம்மா.. சத்தம்
போடாத.. இப்போ
வந்துடுவா.. முதல்ல
அவ சொல்றதக்
கேளும்மா..
என்னன்னு
தெரியாமலே இப்படிக்
கோபப் படறே?
நீதான்
சொல்லேன்...
இல்லம்மா..
அவளே வந்து
சொல்றேன்னு
சொல்லிட்டா..
என்னாலப் பேச
முடியாது..
சரி வரட்டும்
நான் பார்த்துக்கறேன்
என்று சொன்னாள்.
அதற்குள்
உள்ளே விநாயகி
வந்துவிட்டாள.
வணக்கம்
அம்மா என்றாள்
விநாயகி.
வாம்மா
உட்காரு என்றார்
குமாரின் அப்பா.

தேங்ஸ்ப்பா..
என்றாள். அதற்குள்
தனம் கோபம்
குறையாமல்..
இருக்கட்டும்.
எம்புள்ளயோ எவ்வளவு
வருஷமா சகவாசம்?
என்றாள் தனம்.அம்மா
நானும் குமாரும்
ஒருத்தருக்காக
தர்மாஸ்பத்திரிக்கு
ரத்தம்
கொடுக்கப்போனோம்.
அங்கேர்ந்துதான்
பழக்கம்.. என்றாள்.
அதுக்காக
அநாதை உன்ன
ஏத்துக்கணுமா?
என்றாள். விநாயகி
அமைதியாகக்
குமாரைப் பார்த்தாள்.
குமார் சற்றே குரலை
உயர்த்தி..
முதல்ல அவ
சொல்றதக் கேளும்மா
என்றான்.
என்னடா அவ
சொல்றது? என்று
கோபமாகக் கேட்டாள்.
அதற்குள்
விநாயகி தனத்தின்
அருகே வந்து..
அம்மா நான்
சொல்றதக் கேளுங்க..
நான் ஒருத்தரக்
காதலிக்கிறேன்.
அவங்க வீட்டுலே
ஓகேன்னு
சொல்லிட்டாங்க..
உங்க அப்பா அம்மாவ
அழச்சிட்டு வாங்கன்னு
சொல்லிட்டாங்க..
நான் சின்ன வயசா
இருக்கும்போதே
என்னோட அப்பாவும்
அம்மாவும் மஞ்சள்
காமாலை வந்து
இறந்துபோயிட்டாங்களாம்..
என்னோட
பாட்டித்தான் என்ன
வளர்த்தாங்க..
எல்லாமும்
சொன்னாங்க..
இப்போ பாட்டியும்
இறந்துபோயிட்டாங்க..
எனக்குன்னு யாரும்
கிடையாது.. அதனால
நீங்களும் அப்பாவும்
வந்து எனக்கு அப்பா
அம்மாவா இருந்து
எல்லாத்தையும்
நடத்திக்
குடுக்கணும்னு
கேட்டுக்கறேன்
என்றாள்.
தனம் முகம் மாறி
கோபம் தணிந்து,
விநாயகியின்
கையைப்
பிடித்துக்கொண்டு,
மகிழ்ச்சியுடன்
அவசியம் நானும்
அப்பாவும்
வர்றோம்.. நல்லதே
நடக்கும்.. எனக்கு
பொம்பளப்புள்ளயே
கிடையாதும்மா..
இனிமே நீதாம்மா
எங்களோடப்
பொண்ணு என்றாள்.

**ஹரணி,**
தஞ்சாவூர்-2

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



14. எல்லா ஆவியையும் பிடிக்கலாம் ஆனால் ஒரே ஒரு ஆவியை மட்டும் பிடிக்க முடியாது அது என்ன..?

விடை: கொட்டாவி.

15. உலகத்துலயே எந்த நரி பெரிய நரி..?

விடை: Dictionary.



# தினம் ஒரு சமையல்



## வறுத்தரைத்த சிக்கன் கிரேவி

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| 1/2 கிலோ | - சிக்கன் |
| 100 கிராம் | - சின்ன வெங்காயம் |
| 1 | -தக்காளி |
| 2 | - பச்சைமிளகாய் |
| 1-1/2 டீஸ்பூன் | - இஞ்ணி பூண்டு விழுது |
| தேவையானஅளவு | -நல்லெண்ணைய் |
| தேவையானஅளவு | - உப்பு |
| சிறிதளவு | - மல்லிதழை |

வறுத்து அரைக்க

| | |
|---|---|
| 1-1/2 டீஸ்பூன் | - மல்லி |
| 2 டீஸ்பூன் | - மிளகு |
| 1 டீஸ்பூன் | - சீரகம் |
| 1 துண்டு | - பட்டை |
| 2 டீஸ்பூன் | - தேங்காய் துருவல் |
| 1 டீஸ்பூன் | -மிளகாய்தூள் |



செய்முறை:

வறுத்து அரைக்க தேவையான பொருட்களை வெறும் வாணலியில் இளந்தீயில் வறுத்து கொள்ளவும்.

மிளகாய் தூள் வறுக்க தேவையில்லை அடுப்பை அணைத்த பின்னர் வறுத்த மசாலா பொருட்களோடு சேர்க்கவும்

வாணலியல் எண்ணெய் ஊற்றி காய்ந்த பின் வெங்காயம் சேர்த்து சிவக்க வதக்கி,தக்காளி சேர்த்து வதக்கவும்.

நன்கு வதங்கிய பின்னர் இஞ்சி,பூண்டு விழுது சேர்த்து பச்சை வானை நீங்கும் வரை வதக்கி வறுத்து அரைத்த மசாலா சேர்த்து வதக்கவும்.

சிறிதளவு தண்ணீர் சேர்த்து வேகவைக்கவும்.சிக்கன் 3/4 பாகம் வெந்த பின்னர் சிறுதீயில் வைத்திருந்து,வெந்து எண்ணெய் பிரிந்த பின் இறக்கவும்.

## நோனி பழங்கள் பயன்கள்



மருத்துவக் குணம் நிறைந்த நோனி பழங்களை, ராமநாதபுரம் மாவட்டத்தில் சாகுபடி செய்து சாதித்துள்ளார் பஞ்சம்தாங்கி கிராம விவசாயி ஒருவர்.

தமிழகத்தின் பூர்வீக மரமான மஞ்சனத்தி வகையைச் சார்ந்தது வெண் நுணா என்னும் நோனி மரம். ஆஸ்திரேலியா, மொரீஷியஸ், ஜாவா, பிலிப்பைன்ஸ், ஹவாய் போன்ற நாடுகளில் அதிகம் உற்பத்தி செய்யப்படும் நோனி பழங்களின் பழச்சாறுக்கு அமெரிக்கா, ஐரோப்பா உள்ளிட்ட மேலைநாடுகளில் கிராக்கி அதிகம்.

தமிழகத்தின் வறண்ட பாலை யாகக் கருதப்படும் ராமநாதபுரம் மாவட்டத்தில், திருப்புல்லாணி அருகே பஞ்சம்தாங்கி எனும் கிராமத்தில், மருத்துவக் குணம் நிறைந்த நோனி பழங்களை, கடந்த 6 ஆண்டுகளாக உற்பத்தி செய்து வருகிறார் விவசாயி சந்தவழியான்.

ராமநாதபுரத்தை ஆண்ட சேதுபதி மன்னர்களுக்கு, எங்கள் குடும்பத்தினர் பரம்பரை வைத்தியர்களாக இருந்துள்ளனர். அதனால் மருத்துவக் குணங்களைக் கொண்ட மரங்கள், தாவரங்களைப் பற்றிய அறிவு பாரம்பரியமாக இருந்துவந்தாலும் நான் சித்த மருத்துவர் ஆகாமல் சென்னை நியூ காலேஜில் இன்டர்மீடியட் படித்து சவூதி அரேபியா உள்ளிட்ட பல ஊர்களுக்குச் சென்று பணிபுரிந்தேன்.

இந்தியாவில் மறு அறிமுகம்

சில ஆண்டுகளுக்கு முன்னர், இந்தியாவில் நோனியை மறு அறிமுகம் செய்தபோது மஞ்சனத்தி மர வகையைச் சார்ந்த வெண்நுணாவான நோனியின் மீது ஈர்ப்பு உண்டானது. அதன்பின்னர், ஆஸ்திரேலியாவில் வசிக்கும் நண்பர் மூலம் நோனி பழக்கன்றுகளை 2008-ல் இறக்குமதி செய்து, தற்போது திருப்புல்லாணி அருகே பஞ்சம்தாங்கி கிராமத்தில் ஐந்தரை ஏக்கரில் தென்னை மரங்களுக்கு இடையே ஊடுபயிராக வளர்த்து வருகிறேன்.

# 9 நாட்களில் கென் கருணாஸின் யூத் திரைப்படம் செய்துள்ள மொத்த வசூல்.. செம கலெக்ஷன்



தமிழ் சினிமா ரசிகர்களுக்கு யூத் படம் என்று கூறியதும் விஜய்யின் படம் தான் நியாபகம் வரும்.

இப்போது யூத் படம் என்றால் கென் கருணாஸ் இயக்கி, நடித்துள்ள படம் தான் நியாபகத்திற்கு வருகிறது. கடந்த மார்ச் 19ம் தேதி இப்படம் பெரிய எதிர்ப்பார்ப்புகளுக்கு இடையில் வெளியாகியுள்ளது.

இந்தப் படத்தில் மலையாள நடிகர் சுராஜ் வெஞ்சரமூடு முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இவரைத் தவிர்த்து, தேவதர்ஷினி, அனிஷ்மா அனில்குமார், மீனாட்சி தினேஷ், பிரியன்ஷி யாதவ் ஆகியோர் நடித்துள்ளனர்.

பள்ளியில் படிக்கும் கென், காதலியைத் தேடி அலைய கல்லூரியிலும் அந்தப் பயணம் தொடர்கிறது. பின் காதல், ஏமாற்றம், பிரேக் அப் என வழக்கம் போல் காதல் கலாட்டாக்கள் நடக்கிறது.

பாக்ஸ் ஆபிஸ்

ரசிகர்களின் அமோக வரவேற்பை பெற்றுள்ள கென் கருணாஸின் யூத் படம் இதுவரை மொத்தமாக ரூ. 40 கோடி வரை வசூல் வேட்டை நடத்தியுள்ளதாம்.

திரையரங்குகளில் வெற்றிப்பெற்றுள்ள இப்படம் வரும் ஏப்ரல் 10ம் தேதி நெட்ஃப்ளிக்ஸ் ஓடிடி தளத்திலும் வெளியாக உள்ளதாம்.

சினிமா



பிரியா வாரியர் தற்போது ஹாட் உடையில் ஆற்றின் ஓரத்தில் எடுத்த போட்டோஷூட் ஸ்டில்களை பாருங்க.

# கூட்ட நெரிசலுக்கு நடுவில் சிக்கிய ராஷ்மிகா.. விஜய் தேவரகொண்டா என்ன செய்திருக்கிறார் பாருங்க



நடிகை ராஷ்மிகா தேசிய அளவில் பிரபலமான ஹீரோயினாக இருக்கிறார். அவருக்கு சமீபத்தில் தெலுங்கு நடிகர் விஜய் தேவரகொண்டா உடன் திருமணம் நடந்து முடிந்தது.

அவர்கள் இருவரும் தாய்லாந்துக்கு சமீபத்தில் ஹனிமூன் சென்று இருந்த புகைப்படங்களும் வெளியாகி வைரல் ஆகின.

இந்நிலையில் ராஷ்மிகா மற்றும் விஜய் தேவரகொண்டா இருவரும் Ranabaali ஷூட்டிங்கிற்காக அனந்தபூர் சென்று இருந்தனர். அங்கு இருக்கும் கோவில் ஒன்றில் அவர்கள் சாமி தரிசனம் செய்தனர்.

அப்போது கோவிலுக்கு வெளியே அதிகம் கூட்டம் கூடிவிட்டது. அவர்களை பார்க்க அதிகம் பேர் வந்ததால் நெரிசல் ஏற்பட்டது. அதற்கு நடுவில் ராஷ்மிகாவை விஜய் தேவரகொண்டா பாதுகாப்பாக அழைத்து சென்ற வீடியோ தற்போது வெளியாகி வைரல் ஆகி உள்ளது.

# 60 மற்றும் 70 வயது திருமணம் (பீமரத சாந்தி) பற்றி அறிவோம்


60-ஆம் கல்யாணம் அல்லது சஷ்டியப்தபூர்த்தி என்பது ஒரு ஆண் தனது 60 வயதை நிறைவு செய்து, 61-வது வயதில் அடியெடுத்து வைக்கும் போது, மனைவியுடன் மீண்டும் திருமணம் செய்து கொள்ளும் ஒரு புனிதமான வைபவம் ஆகும். இது மணிவிழா என்றும் அழைக்கப்படுகிறது. ஆயுள், ஆரோக்கியம் மற்றும் குடும்ப மகிழ்ச்சியை அதிகரிக்கவும், கணவனின் நீண்ட ஆயுளுக்காகவும் இந்த சடங்கு செய்யப்படுகிறது

**60-ஆம் கல்யாணத்தின் முக்கிய அம்சங்கள் :**

**பொருள் :**
சஷ்டி (60) + அப்த (ஆண்டு) + பூர்த்தி (முடிவு) = 60 ஆண்டுகள் நிறைவு.

**காரணம் :**
ஜோதிட ரீதியாக, 60 வயதில் காலயவனன், ஸுதூம்ரன் போன்ற தேவதைகள் உடலில் புகுந்து பலவீனப்படுத்துவார்கள், அதைத் தடுக்கவும் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் இந்த யாகம் செய்யப்படுகிறது. இது ஒரு புதுப்பிறவியாகக் கருதப்படுகிறது.

**எப்போது :**
கணவர் பிறந்த தமிழ் மாதம், நட்சத்திரம் மற்றும் திதியில், 60 வயது முடிந்து 61-வது வயது தொடங்கும் போது நடத்தப்பட வேண்டும்.



**யார் நடத்துவது :**
பிள்ளைகள், மருமகள்கள், மருமகன்கள் மற்றும் பேரன் பேத்திகள் முன்னிலையில் இந்த விழா குடும்ப உறுப்பினர்களால் நடத்தப்படுகிறது.

**சடங்குகள் :**
கணபதி ஹோமம், மிருத்யுஞ்ஜய ஹோமம் (ஆயுள் ஹோமம்), தன்வந்திரி ஹோமம் மற்றும் கலசாபிஷேகம் ஆகியவை முக்கிய சடங்குகளாகும். திருக்கடையூர் போன்ற புனிதத் தலங்களில் செய்வது சிறப்பு.

இந்த விழா கணவன்-மனைவி இடையேயான பந்தத்தை வலுப்படுத்தி, அவர்களின் புதிய வாழ்க்கைப் பயணத்திற்கு ஆசீர்வாதம் பெறுவதாக அமைகிறது.

70-வயது கல்யாணம், பீமரத சாந்தி என்று அழைக்கப்படுகிறது. ஒருவர் தனது 69 வயதை நிறைவு செய்து 70-வது வயதில் அடியெடுத்து வைக்கும்போது (அல்லது 70 முடிந்து 71-ல்), ஆரோக்கியம் மற்றும் நீண்ட ஆயுளுக்காக இந்த ஹோமம் மற்றும் சாந்தி பூஜைகள் செய்யப்படுகின்றன. இது தம்பதிகளின் ஆயுளை நீட்டிக்கும் புனிதமான சடங்காக கருதப்படுகிறது.

**முக்கிய தகவல்கள்:**
**பொருள் :** பீமரதன் (எமன்/மிருத்யு) சாந்திப்படுத்துதல்.

**நேரம் :**
பிறந்த நட்சத்திர நாளில் நடத்தப்படுகிறது.

**சடங்குகள் :**
ஆயுஷ் ஹோமம், ம்ருத்யுஞ்சய ஹோமம், தன்வந்திரி ஹோமம் மற்றும் மாங்கல்ய தாரணம்.

**சிறப்பிடம் :**
திருக்கடையூர் போன்ற முக்கிய சிவ தலங்கள் அமைந்துள்ள ஊர்களில் இது சிறப்பாக செய்யப்படுகிறது.

இந்த விழா பொதுவாக தம்பதிகளின் குழந்தைகள் அல்லது பேரக்குழந்தை மற்றும் உறவுகள் நண்பர்களால் நடத்தப்படுகிறது, இது உறவுகளைப் புதுப்பித்து, புதிய உற்சாகத்துடன் வாழ்க்கையைத் தொடர உதவுகிறது.




**ப.கோபிபச்சமுத்து**
புதுப்பேட்டை,
கிருஷ்ணகிரி - 1

தினம் ஒரு தலைவர்கள்

# கேமு கலானி வரலாறு

கேமு கலானி (1923 மார்ச் 23 - 1943 சனவரி 21) இவர் இந்தியச் சுதந்திர இயக்கத்தின் போது சிந்தி புரட்சிகர மற்றும் சுதந்திரப் போராட்ட வீரர் ஆவார். நாட்டின் சுதந்திரப் போராட்டத்திற்காகத் தியாகம் செய்த இளைய புரட்சியாளர்களில் ஒருவரான இவர், தனது 20 வது பிறந்தநாளுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் 19 வயதாக இருந்தபோது ஆங்கிலேயர்களால் தூக்கிலிடப்பட்டார். இவர் அகில இந்திய மாணவர் கூட்டமைப்புடன் இணைந்த ஒரு மாணவர் அமைப்பான சுய இராச்சிய சேனையின் தலைவராக இருந்தார்,

ஆரம்பக் கால வாழ்க்கை இவர் 1923 மார்ச் 1923 அன்று சிந்து (இப்போது பாக்கித்தான் ) சுக்கூர் என்ற இடத்தில் பிறந்தார். இவரது பெற்றோர் பெசுமல் கலானியும், ஜெதி பாய் ஆகியோராவர். ஓர் இளைஞனாக இவர் தனது நண்பர்களுடன் சேர்ந்து வெளிநாட்டுப் பொருட்களைப் புறக்கணிப்பதற்காகப் பிரச்சாரம் செய்தார். மேலும் சுதேசி பொருட்களைப் பயன்படுத்த மக்களை வற்புறுத்த முயன்றார். புரட்சிகர நடவடிக்கைகளில் ஈர்க்கப்பட்ட இவர், பிரித்தானியரை விரட்டியடிக்கும் நோக்கத்துடன் எதிர்ப்பு நடவடிக்கைகளில் பங்கேற்கத் தொடங்கினார். இவர் பிரித்தானிய இராச்சியத்திற்கு எதிரான தாக்குதல்களையும் அவர்களுக்குச் சொந்தமான வாகனங்களை எரிப்பதிலும் ஈடுபட்டிருந்தார்.



சுதந்திரப் போராட்டம்

கேமு கலானியின் இறுதிச் சடங்கு, 21 சனவரி 1943 1942 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டபோது, மகாத்மா காந்தியின் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் இவர் சேர்ந்தார். சிந்தில் இயக்கத்திற்கு ஆதரவு பிரித்தானிய ஆட்சியாளர்கள் ஐரோப்பியப் படைவீரர்களைக் கொண்ட சிறப்புத் துருப்புக்களை அனுப்ப வேண்டியிருந்தது. இந்தத் துருப்புக்களின் இரயிலும், அவற்றின் பொருட்கள் தனது நகரத்தின் வழியாகச் செல்லும் என்று இவர் கண்டுபிடித்தார். இரயில் பாதையிலிருந்து உலோகப் பட்டிகளை அகற்றுவதன் மூலம் அதைத் தடம் புரள முடிவு செய்தார். இவருக்கோ அல்லது இவருடைய




சகாக்களுக்கோ தேவையான கருவிகள் இல்லை. எனவே இதற்காக ஒரு கயிற்றைப் பயன்படுத்த வேண்டியிருந்தது. நாசவேலை முடிவதற்கு முன்னர் இவர்கள் பிரித்தானியத் துருப்புக்களால் கண்டுபிடிக்கப்பட்டனர். இவர் பிடிபட்டு, சிறையில் அடைக்கப்பட்டார். இவரது சக சதிகாரர்களின் பெயர்களைக் கூறச் சித்திரவதை செய்யப்பட்டார். இவர் எந்தத் தகவலையும் வெளியிட மறுத்து, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டார். சிந்து மக்கள் ஆளுநரிடம் கருணையைக் கோரினர். ஆனால் அதை வழங்குவதற்கான நிபந்தனை என்னவென்றால், இவரது இணைச் சதிகாரர்களின் அடையாளத்தை அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டும். இவர் மீண்டும் தகவல்களை வெளியிட மறுத்துவிட்டார். இவர் சனவரி 21, 1943 அன்று தூக்கிலிடப்பட்டார்.

மரண தண்டனை வழங்கப்பட்டதில் இவர் மிகவும் மகிழ்ச்சியடைந்ததாகக் கூறப்படுகிறது. வழக்கத்திற்கு மாறாக, இவர் தண்டனைக்கும், மரணதண்டனைக்கும் இடையேயான நேரத்தில் இவர் ஒரு நல்ல உடல் எடையைப் பெற்றார். மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட நாளில், இவர் மிகுந்த மகிழ்ச்சியுடன் காணப்பட்டார். பகவத் கீதையின் நகலை கையில் வைத்துக் கொண்டு தூக்கு மேடைக்குச் சென்றார், முழு வழியிலும் புன்னகைத்துக் கொண்டே இருந்தார்.

# உ.பி. விவசாயி மனைவி கணக்கில் ரூ.10 கோடி திடீரென வரவு வைத்த வங்கி

**லக்னோ, மார்ச் 31:**

உத்தர பிரதேச மாநிலம் மெய்ன்புரி மாவட்டம், தேவ்கஞ்ச் கிராமத்தில் வசிப்பவர் பராஸ்பன் பஹிலியா, விவசாயி. இவரது மனைவி ரீடா. இவர் பேங்க் ஆப் இண்டியாவில் கணக்கு வைத்துள்ளார்.

அஷ்டமி விழாவை முன்னிட்டு வங்கிக்கு விடுமுறை என்பதால், அருகில் உள்ள ஏடிஎம் மையத்துக்கு ரீடா சென்று தனது வங்கிக் கணக்கில் எவ்வளவு பணம் உள்ளது என்று பார்த்தார். அப்போது, ரூ.9 கோடியே 99 லட்சத்து 49,588 இருந்ததைப் பார்த்து ரீடா மலைத்துப் போனார். ஏடிஎம்.மில் காட்டிய தொகையை மொபைல் போனில் வீடியோவாக பதிவு செய்து சமூக வலைதளத்தில் வெளியிட்டார்.

அது வைரலாகி விட்டது. பின்னர், தனது வங்கிக் கணக்கில் உள்ள பணத்தை யாரும் எடுக்கக் கூடாது என்று குடும்ப உறுப்பினர்கள் அனைவரிடமும் ரீடா திட்டவட்டமாகக் கூறிவிட்டார். அதை அறிந்து அக்கம் பக்கத்தினர் ரீடாவின் நேர்மையைப் பாராட்டினர்.

தகவல் அறிந்த கரீம்கஞ்ச் பேங்க் ஆப் இண்டியா கிளை மேலாளர் ரிஷிகாந்த் பாண்டே கூறும்போது, "பணப் பரிமாற்றம் நடைபெறும் போதோ அல்லது தொழில்நுட்பக் கோளாறு காரணமாகவோ தவறாக பணம் ரீடா வங்கிக் கணக்கில் பணம் வரவு வைக்கப்பட்டிருக்கலாம். வங்கிக் கிளை திறந்தவுடன் அது சரி செய்யப்படும்" என்றார்.

# மிக்-29 போர் விமானத்தில் அதிநவீன அஸ்ராம் ஏவுகணை




**புதுடெல்லி, மார்ச் 31:**

இந்திய விமானப்படையில் உள்ள மிக்-29 போர் விமானத்தில் நவீன அஸ்ராம் ஏவுகணைகள் இணைக்கப்பட உள்ளன.

இந்திய விமானப்படையில் மிக்-29 ரக போர் விமானங்களின் 2 படைப் பிரிவுகள் உள்ளன. இந்த விமானங்களில் எதிரி நாட்டு போர் விமானங்களை தகர்க்கும் வான் தாக்குதலுக்கு ரஷ்ய தயாரிப்பான ஆர்-73 ரக ஏவுகணைகள் பயன்படுத்தப்பட்டு வந்தன. இது 10 முதல் 15 கி.மீ தூரம் மட்டும் சென்று தாக்கும். விமானப் படையில் உள்ள தேஜஸ் மற்றும் ஜாகுவார் போர் விமானங்களில் அதி நவீன அஸ்ராம் ஏவுகணைகள் பயன்படுத்தப்படுகின்றன. ஐரோப்பிய தயாரிப்பான இந்த ஏவுகணைகள் 25 கி.மீ தூரம் சென்று தாக்கும் திறன் படைத்தவை.

இந்த வகை ஏவுகணைகளை மிக்-29 ரக போர் விமானங்களில் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக மிக்-29 ரக போர் விமானத்தில் சில மாற்றம் செய்யப்பட வேண்டும். மேம்படுத்தப்பட்ட மிக்-29 ரக போர் விமானத்தில், பயன்படுத்த அஸ்ராம் ஏவுகணைகளை எபிடிஏ நிறுவனத்திடம் இருந்து வாங்க பாதுகாப்பு அமைச்சகம் ஆர்டர் கொடுக்க உள்ளது. இதற்கான ஒப்பந்த அறிக்கை கோரப்பட்டுள்ளது. இதன் மூலம் மிக்-29 ரக போர் விமானத்தின் தாக்குதல் திறன் மேம்படும்.

# மேற்கு வங்க சட்டப்பேரவை தேர்தலில் வேட்பாளர்கள் பட்டியலை வெளியிட்டது காங்கிரஸ்

**கொல்கத்தா, மார்ச் 31:**

காங்கிரஸ் கட்சியின் மத்திய தேர்தல் குழு கூட்டம் டெல்லியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, பொதுச் செயலாளர் (அமைப்பு) கே.சி. வேணுகோபால் மற்றும் மேற்கு வங்கத்தைச் சேர்ந்த பல தலைவர்கள் கலந்து கொண்டனர்.



இக்கூட்டத்தில், மேற்கு வங்கத்தில் உள்ள அனைத்து 294 இடங்களிலும் போட்டியிடுவது என முடிவு செய்யப்பட்டது. இந்நிலையில் 284 தொகுதிகளுக்கான வேட்பாளர் பட்டியலை காங்கிரஸ் கட்சி நேற்று வெளியிட்டது. இதன்படி, கட்சியின் மூத்த தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரி பஹராம்பூர் தொகுதியில் போட்டியிடுகிறார்.

முதல்வர் மம்தா பானர்ஜி போட்டியிடும் பவானிப்பூர் தொகுதியில், பிரதிப் பிரசாத் களமிறக்கப்பட்டுள்ளார். இதுபோல முன்னாள் எம்.பி.மவுசம் நூர் மலாட்டிபூர் தொகுதியில் போட்டியிடுகிறார்.

# அசாமில் 3-வது முறை ஆட்சி: அமித் ஷா நம்பிக்கை

**குவாஹாட்டி, மார்ச் 31:**

அசாம் தேர்தலில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி (என்டிஏ) 90-க்கும் அதிகமான இடங்களில் வெற்றி பெற்று, மூன்றாவது முறையாக ஆட்சியைத் தக்கவைக்கும் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.



தேர்தல் நடைபெறவுள்ள அசாம் மாநிலத்துக்கு இரண்டு நாள் பயணமாக நேற்று முன்தினம் வருகை தந்த அவர், குவாஹாட்டியில் பிரம்மாண்டமான சாலைப் பேரணியைத் தொடங்கி வைத்தார். அதன் பின்னர் செய்தியாளர்களிடம் அமித் ஷா கூறியதாவது : அசாம் மக்கள் தொடர்ந்து மூன்றாவது முறையாக என்டிஏ அரசை தேர்ந்தெடுப்பதில் மிகுந்த ஆர்வத்துடன் உள்ளனர். வரவிருக்கும் சட்டப் பேரவைத் தேர்தலில் உறுதியாக நாங்கள் 90-க்கும் அதிகமான தொகுதிகளில் வெற்றி பெறுவோம்.

பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அசாம் முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா தலைமையிலான ஆட்சியில் இம்மாநிலத்தில் மிகப்பெரிய வளர்ச்சிப் பணிகள் நடைபெற்றுள்ளன. உலகத்தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஒருகாலத்தில் அசாமில் நிலவிய தீவிரவாதம், குண்டுவெடிப்புகள் மற்றும் துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் முற்றிலும் ஒழிக்கப்பட்டுள்ளன.

தற்போது மாநிலத்தின் சுகாதாரக் கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டு வருகிறது. ஒட்டுமொத்த வடகிழக்கு மாநிலங்களின் கல்வி மற்றும் சுகாதார மையமாக அசாம் உருவெடுத்துள்ளது. இவ்வாறு அமித் ஷா கூறினார். அசாம் மாநில சட்டப்பேரவைக்கு வாக்குப் பதிவு ஏப்ரல் 9-ம் தேதியும், வாக்கு எண்ணிக்கை மே 4-ம் தேதியும் நடைபெறவுள்ளன.

தற்போதுள்ள சட்டப்பேரவையில் பா.ஜ.க.வுக்கு 64 எம்எல்ஏ.க்கள் உள்ளனர். அதன் கூட்டணிக் கட்சிகளாக அஸ்ஸாம் கன பரிஷத் (9), ஐக்கிய மக்கள் லிபரல் கட்சி (7) மற்றும் போடோலாந்து மக்கள் முன்னணி (3) ஆகியவை உள்ளன.

எதிர் தரப்பில் காங்கிரஸ் கட்சிக்கு 26 இடங்களும், ஏஐயுடிஎஃப். கட்சிக்கு 15 இடங்களும் உள்ளன. 2023 தொகுதி மறுவரையறைக்குப் பிறகு அசாமில் நடைபெறும் முதல் சட்டப்பேரவைத் தேர்தல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

# பெற்றோரை புறக்கணிக்கும் ஊழியர்களின் சம்பளத்தில் பிடித்தம்... தெலுங்கானாவில் புதிய சட்டம்

**ஐதராபாத், மார்ச் 31:**

தெலுங்கானாவில் முதல்-மந்திரி ரேவந்த் ரெட்டி தலைமையிலான காங்கிரஸ் ஆட்சி நடந்து வருகிறது. இந்நிலையில், தெலங்கானா சட்டசபையில் நேற்று வரலாற்று சிறப்புமிக்க புதிய மசோதா ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன்படி, பெற்றோரை கவனிக்க தவறும் அல்லது புறக்கணிக்கும் அரசு மற்றும் தனியார் ஊழியர்களின் சம்பளத்தில் ஒரு பகுதி பிடித்தம் செய்யப்படும். தெலுங்கானா ஊழியர்கள் பொறுப்புக்கூறுதல் மற்றும் பெற்றோருக்கு ஆதரவு அளிப்பதை கண்காணித்தல் மசோதா, 2026-க்கு நேற்று சட்டசபையில் ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளது.

இந்த மசோதாவை அறிமுகம் செய்து முதல்-மந்திரி ரேவந்த் ரெட்டி பேசும்போது, மூத்த குடிமக்களின் நிதி பாதுகாப்பை உறுதி செய்ய தெலுங்கானா சட்டசபை புதிய மசோதாவை நிறைவேற்றியுள்ளது. இது, தற்போதுள்ள மத்திய சட்டங்களை விட மேம்பட்டதாக உள்ளது. ஏற்கனவே பெற்றோர், மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலவாழ்வு சட்டம் 2007 என்ற தேசிய சட்டம் உள்ளது. இந்த புதிய மசோதாவின்படி பொது பிரதிநிதிகள், அரசு ஊழியர்கள் மற்றும் தனியார் ஊழியர்கள் தங்கள் வயதான பெற்றோரை கவனித்து கொள்ள வேண்டும் என்பது கட்டாயமாகிறது. இதனை கடைப்பிடிக்க தவறினால், அவர்களின் சம்பளத்தில் 15 சதவீதம் அல்லது ரூ.10 ஆயிரம், இவற்றில் எது குறைவோ, அந்த தொகை பிடித்தம் செய்யப்படும். பெற்றோரை புறக்கணிக்கும் பிள்ளைகளை திருத்துவது சமூகத்தின் பொறுப்பாகும். ஒரு சமூக பொறுப்பாக, இந்த மசோதாவை அரசு கொண்டு வந்துள்ளது என்றார். ஊழியர்களிடம் பிடிக்கப்படும் தொகை நேரடியாக, பெற்றோரின் வங்கி கணக்கில் சென்று சேர்ந்து விடும். இதில் எம்.பி., எம்.எல்.ஏ. உள்ளிட்டோரும் கூட விதி விலக்கல்ல. அவர்களும் இந்த சட்டத்திற்குள் அடங்குவர் என தகவல் தெரிவிக்கின்றது. பெற்றோரின் உரிமைகள் நல்லெண்ண அடிப்படையிலேயே பாதுகாக்கப்பட வேண்டும். எனினும், அவர்கள் புறக்கணிக்கப்படும்போது சட்டம் அவர்களுக்கு உறுதுணையாக இருக்கும் என இந்த மசோதா உறுதி செய்யும் என்றார்.

# குஜராத்தில் 103 வயதில் தேநீர் கடை நடத்தும் பாட்டி

**வடோதரா, மார்ச் 31:**

குஜராத் மாநிலம் வதோதராவைச் சேர்ந்தவர் 103 வயதான பாட்டி காஷிபா. மகாராஜா சாயாஜிராவ் பல்கலைக்கழகத்துக்கு அருகில் சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாக சிறிய தேநீர் கடையை நடத்தி வருகிறார். இப்போது அவரது மகன், மருமகள் கடையை நடத்தினாலும் காஷிபா தன்னால் ஆன உதவிகளை செய்து வருகிறார். இது தொடர்பான ஒரு வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது. அந்த வீடியோவில், அந்தப் பாட்டி இஞ்சியைத் துருவி தேநீர் தயாரிப்பதைக் காணலாம். பல தலைமுறை மாணவர்களை ஈர்த்த அவரது இஞ்சி தேநீரின் நறுமணம், இன்றும் வழிப்போக்கர்களை ஈர்த்து வருகிறது.

# 1,100-க்கும் அதிக போலி வெடிகுண்டு மிரட்டல்கள்: மைசூரைச் சேர்ந்தவர் கைது

**புதுடெல்லி, மார்ச் 31:**

சமீபகாலமாக தில்லி உயர் நீதிமன்றம், சட்டப்பேரவை மற்றும் பல கல்வி மற்றும் அரசு நிறுவனங்களுக்கு தொடர்ச்சியாக வெடிகுண்டு மிரட்டல் செய்திகள் அனுப்பப்பட்டு வந்தன. இந்த சம்பவத்தில் கர்நாடகத்தின் மைசூரைச் சேர்ந்த ஒருவரை தில்லி போலீஸார் கைது செய்துள்ளதாக அதிகாரிகள் திங்கள்கிழமை தெரிவித்தனர்.

குற்றம்சாட்டப்பட்ட 47 வயதான ஸ்ரீனிவாஸ் லூயிஸ், வாடகைவீட்டில் இருந்து சனிக்கிழமை தில்லி போலீஸ் மற்றும் உள்ளூர் போலீஸ் குழுக்களால் கைது செய்யப்பட்டதாக அதிகாரிகள் கூறினர். லூயிஸ் ஒரு முதுகலைப் பட்டதாரி என்றும், பெங்களூருவைச் சேர்ந்தவர் என்றும் போலீஸார் தெரிவித்துள்ளனர். தற்போது அவர் வேலையின்றி, ஓய்வுபெற்ற அரசு ஊழியரான தனது தாயாருடன் வசித்து வருகிறார். அவர் மன அழுத்தத்தில் இருந்திருக்கலாம் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

ஆரம்பகட்ட விசாரணையின்போது, மின்னஞ்சல்கள் மற்றும் பிற தகவல் தொடர்பு தளங்கள் வழியாக நாடு முழுவதும் 1,100-க்கும் மேற்பட்ட மிரட்டல் செய்திகளை அனுப்பியதாக அவர் ஒப்புக்கொண்டார் என்று மூத்த அதிகாரி ஒருவர் கூறினார். இந்த மிரட்டல்களைத் தொடர்ந்து பல்வேறு மாநிலங்களில் முதல் தகவல் அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக போலீஸார் தெரிவித்துள்ளனர்.

# நடுவானில் விமானத்தின் ‘எமர்ஜென்சி’ கதவை திறக்க முயன்ற பயணி

**லக்னோ, மார்ச் 31:**

பெங்களூருவில் இருந்து நேற்று இரவு 8.15 மணிக்கு வாரணாசி நோக்கி இண்டிகோ விமானம் புறப்பட்டது. அந்த விமானத்தில், உத்தர பிரதேச மாநிலத்தை சேர்ந்த முகமது அத்னன் என்பவர் பயணம் செய்தார். விமானம் புறப்பட்டு சுமார் 15 நிமிடங்களுக்குள், முகமது அத்னன் விமானத்தின் ‘எமர்ஜென்சி’ கதவை திறப்பதற்கு முயற்சி செய்துள்ளார். இதனை விமான ஊழியர்கள் பார்த்தபோது, தவறுதலாக அந்த கதவை திறக்க முயற்சி செய்துவிட்டதாக அத்னன் கூறினார். அவரை எச்சரித்த விமான ஊழியர்கள், இனி இவ்வாறு செய்யக் கூடாது என அறிவுறுத்தினர். அந்த விமானம் சுமார் 10.20 மணியளவில் வாரணாசியின் லால் பகதூர் சாஸ்திரி சர்வதேச விமான நிலையம் அருகே வந்தது. விமானம் தரையிறங்குவதற்கு ஒரு சில நிமிடங்களுக்கு முன்பு, முகமது அத்னன் மீண்டும் விமானத்தின் எமர்ஜென்சி கதவை திறக்க முயன்றார். அவரை விமான ஊழியர்கள் தடுத்து நிறுத்தினர். இதற்கிடையில் விமானத்தில் எச்சரிக்கை மணி ஒலித்த நிலையில், விமானி அந்த விமானத்தை தரையிறக்காமல் மீண்டும் வானில் பறக்கச் செய்தார். பின்னர் சுமார் 10.35 மணியளவில் அந்த விமானம் பாதுகாப்பாக தரையிறங்கியது. விமானம் தரையிறங்கிய பிறகு, விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள் முகமது அத்னனை கைது செய்து அழைத்துச் சென்றனர். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், ‘நான் ஏன் அவ்வாறு செய்தேன் என்று தெரியவில்லை. எனக்கு பேய் பிடித்துவிட்டது’ என்று போலீசாரிடம் முகமது அத்னன் கூறியுள்ளார்.

# கேரளாவில் 42 பெண்கள் மட்டுமே தேர்தலில் போட்டி

**திருவனந்தபுரம், மார்ச் 31:**

இந்திய தேர்தல் ஆணையத்தின் சமீபத்திய தரவுகளின் படி, கேரளாவில் பெண் வாக்காளர்களின் எண்ணிக்கை (1,39,21,868) ஆண்களை விட (1,32,20,811) அதிகம். ஆனால் இந்த முறை 42 பெண்கள் மட்டுமே முக்கிய கட்சிகளின் சார்பில் வேட்பாளர்களாகக் களமிறக்கப்பட்டுள்ளனர்.

பாஜக சார்பில் 14, சிபிஐ(எம்) சார்பில் 12, காங்கிரஸ் சார்பில் 9, சிபிஐ சார்பில் 5, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் (முதல் முறையாக) 2 பெண்கள் போட்டியிடுகின்றனர்.




இதுகுறித்து காங்கிரஸ் எம்எல்ஏ பி.சி.விஷ்ணுநாத் கூறும்போது, “பெண்களுக்கு அதிக இடம் கொடுக்கத் தலைமை முயற்சி செய்தாலும், வெற்றி வாய்ப்பு உள்ளிட்ட காரணங்களால் கட்டமைப்பு ரீதியான தடைகள் உள்ளன” என்றார். சிபிஐ (எம்) மூத்த தலைவரும் அனைத்து இந்திய மாதர் சங்க நிர்வாகியுமான பி.கே. ஸ்ரீமதி கூறும்போது, “இடதுசாரி முன்னணி பெண்களுக்கு மொத்தம் 18 இடங்களை வழங்கியுள்ளது. இது எவ்வகையிலும் போதுமானது அல்ல. தேர்தலில் பெண்களுக்குக் குறைவான இடங்களே ஒதுக்கப்படுவது வருத்தமளிக்கிறது” என்றார்.

கேரளாவில் 1957-ல் சட்டப் பேரவை உருவானது முதல் இன்று வரை, பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை 10 சதவீதத்தைத் தாண்டவில்லை.

மத்திய அரசு கொண்டு வந்த ‘நாரி சக்தி வந்தன் அதினியம்’ (பெண்கள் இடஒதுக்கீடு சட்டம்) கடந்த செப்டம்பர் மாதம் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றது. இது பெண் தலைவர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது.

எனினும், தொகுதி மறுவரையறை பணிகள் முடிவடையாததால் இந்தச் சட்டம் இத்தேர்தலில் நடைமுறைக்கு வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# மயானத்தில் எரியும் சிதைகளுக்கு இடையே 282 ஆண்டுகளாக நடனம்



**புதுடெல்லி, மார்ச் 31:**

உத்தரபிரதேசம் வாராணசியின் மணிகர்ணிகா மயானத்தில் எரியும் சிதைகளுக்கு இடையே இளம்பெண்களின் நடன நிகழ்ச்சி நடைபெற்றது. இரவு முழுவதுமான இந்த பாரம்பரிய நிகழ்ச்சி கடந்த 282 வருடங்களாகத் தொடர்கிறது.

உ.பி.யின் முக்கியப் புனித நகரமாக இருப்பது பனாரஸ் மற்றும் காசி எனும் வாராணசி. மிகவும் பழமையான நகரமாகக் கருதப்படும் இங்கு பல பாரம்பரியங்களும் கலாச்சாரங்களும் பல நூற்றாண்டுகளாகத் தொடர்கின்றன. இதில் ஒன்றாக தற்போதைய நவராத்திரி நாட்களில் மயான நடனம் இடம் பெற்றுள்ளது. வாராணசியின் கங்கை கரையில் உள்ள மணிகர்ணிகா மயானத்தில் நேற்று முன்தினம் இரவு ’சைத்ர நவராத்ரி’ எனும் முக்கிய நாளில் இது நடைபெற்றது.

வாராணசியின் கங்கை கரைகளில் உள்ள மயானங்களில் மிகப் பெரியது மணிகர்ணிகா ஆகும். இங்கு 24 மணி நேரமும் இடைவிடாமல் சிதைகள் வந்து எரிகின்றன. இங்கு நடைபெறும் ஈமச் சடங்கு ஆன்மாவுக்கு முக்தி அளிக்கும் என்ற நம்பிக்கையே இதற்கு காரணமாகும். எரியும் சிதைகளுடன் மரண அமைதி நிலவும் இங்கு இரவு முழுவதும் சலங்கை ஒலியுடன் நடனம் தொடர்ந்தது. இதற்காக மேடை அமைத்து நகரவதூக்கள் என்று அழைக்கப்படும் பாலியல் தொழிலாளிகள் நடனமாடுகின்றனர்.

இவர்களுடன் திருநங்கைகளும் இசை நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்றனர். இந்த நிகழ்வின் பின்னணியில் தங்களின் அடுத்த பிறவி, மேம்பட்டதாக அமையும் என்பது அவர்களின் நம்பிக்கையாக உள்ளது.

கடந்த 382 ஆண்டுகளாக இந்த வியப்புக்குரிய சங்கமத்தின் பாரம்பரியம் தொடர்கிறது. இது வெறும் ஒரு கலைநிகழ்ச்சியாக மட்டுமின்றி, ஒரு வகையான பிரார்த்தனை மற்றும் ஆன்மிக வழிபாடாகவும் கருதப்படுகிறது. இந்த நிகழ்ச்சியில் வாராணசி மட்டுமின்றி சுற்றுப்புற மாவட்டங்களில் இருந்தும் வந்தும் நடனமாடுகின்றனர்.

# “பாஜக ஆட்சிக்கு வந்தால் கறி, கோழி, மீன் கிடைக்காது” - மம்தா பானர்ஜி

**புருலியா, மார்ச் 31:**

மேற்கு வங்கத்தில் அடுத்த மாதம் 23, 29-ம் தேதிகளில் இரண்டு கட்டங்களாக தேர்தல் நடைபெறுகிறது. இந்நிலையில், புருலியா தொகுதியில் நேற்று தடாலடி பிரச்சாரத்தில் ஈடுபட்டார் முதல்வர் மம்தா பானர்ஜி. அப்போது அவர் கூறியதாவது: பாஜக ஆட்சிக்கு வந்தால் இறைச்சி கடைகளுக்கு தடை விதிக்கும். மக்கள் சாப்பிட கறி, கோழி, மீன் எதுவும் கடையில் கிடைக்காது. அவர்களுக்கு மக்களின் மதம், கலாச்சாரத்தின் மீது நம்பிக்கை கிடையாது. அவர்கள் வன்முறையில் ஈடுபடுவர், ஆதிவாசி மக்களை மோசம் செய்வர். பாஜக ஆளும் மாநிலங்களில் பெண்கள் தாக்கப்படுகின்றனர். பாஜக மூத்த தலைவர் ஒருவர் (அமித் ஷா) நமக்கு எதிராக ‘குற்றப்பத்திரிகை’ வெளியிட்டுள்ளார். குஜராத்தில் பல வன்முறைகளில் ஈடுபட்ட அவர்களுக்கு எதிராகத் தான் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய வேண்டும்.



திரிணமூல் கட்சியின் லக்ஷ்மிர் பந்தர் திட்டத்தால் பெண்கள் பயனடைந்துள்ளனர். வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணி மூலம் 1.2 கோடி வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. நமது ஆதரவாளர்களைக் குறிவைத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு மம்தா பானர்ஜி கூறினார்.




# சென்னை | மனைவி நடத்தையை சந்தேகித்து கொலை செய்த கணவர் கைது



**சென்னை, மார்ச்.31:** மனைவி, மகளை கொலை செய்த காவலாளியை போலீஸார் கைது செய்தனர். சென்னை திருவிக நகரைச் சேர்ந்தவர் சீனிவாசன் (47). தனியார் நிறுவனம் ஒன்றில் காவலாளியாகப் பணியாற்றி வருகிறார்.

இவரது மனைவி சிவரஞ்சனி (43). டெய்லரான இவர் வீட்டிலேயே துணி தைத்து வந்தார். இந்த தம்பதிக்கு 10-ம் வகுப்பு தேர்வெழுதியுள்ள பிரணவ் (16) என்ற மகனும், 4-ம் வகுப்பு படித்த ஜெயஹரிணி (9) என்ற மகளும் உள்ளனர்.

வீட்டின் கீழ்த்தளத்தில் சீனிவாசனின் தாய் மைதிலியும், மேல் தளத்தில் சீனிவாசன் குடும்பத்துடனும் வசித்துவந்தனர். நேற்று முன்தினம் இரவுப் பணி முடிந்து வீட்டுக்கு வந்த சீனிவாசன் மனைவி, மகளுடன் தூங்கினார். பாட்டி மைதிலியுடன் பேரன் பிரணவ் தூங்கினார்.

இந்நிலையில் நள்ளிரவில் கணவன், மனைவி இடையே வாய்த்தகராறு ஏற்பட்டுள்ளது. இதனால் ஏற்பட்ட ஆத்திரத்தில் கத்தியால் மனைவி கழுத்தை அறுத்துள்ளார். இதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த மகள் கதறினார். உடனே அவரது கழுத்தையும் அறுத்துவிட்டு சீனிவாசன் வீட்டைவிட்டு ஓடிவிட்டார்.

பின்னர் நேற்று அதிகாலை, தாய் மைதிலிக்கு போன் செய்து, நான் மனைவி, மகளை கொலை செய்துவிட்டேன் என்று கூறிவிட்டு இணைப்பைத் துண்டித்துள்ளார். அதிர்ச்சி அடைந்த அவர் உடனடியாக மேலே சென்று பார்த்தபோது அங்கு மருமகள் சிவரஞ்சனி, பேத்தி ஹரிணி கழுத்து அறுபட்ட நிலையில் சடலமாகக் கிடந்தனர்.

தகவலறிந்த திருவிக நகர் போலீஸார் விரைந்து சென்று தாய், மகள் உடல்களைக் கைப்பற்றி பிரேதப் பரிசோதனைக்காக ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பின்னர் திருமுல்லைவாயலில் பதுங்கியிருந்த சீனிவாசனைக் கைது செய்தனர்.

சீனிவாசன் கடந்த 2 ஆண்டுகளாக மனநலப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளார். இதற்காக சிகிச்சையும் பெற்று வந்துள்ளார். மனைவி சிவரஞ்சனியின் நடத்தையில் சீனிவாசன் சந்தேகம் அடைந்துள்ளார்.

ஒருவரை சுட்டிக்காட்டி அவருடன் மனைவியை இணைத்துப் பேசியுள்ளார். சம்பவத்தன்று இரவு கணவன், மனைவி இடையே வழக்கம் போல் தகராறு ஏற்பட்டுள்ளது. இதனால் மேலும் ஆத்திரம் அடைந்த சீனிவாசன் மனைவியை கொலை செய்துள்ளார். இதைக் கண்டு கதறிய மகளையும் கொலை செய்தார். பாட்டியுடன் மகன் தூங்கியதால் உயிர் தப்பியதாக போலீஸார் தெரிவித்தனர்.

# வங்கிக்குள் புகுந்து திருட முயற்சி செய்த தனியார் நிறுவன ஊழியர் கைது

**சென்னை, மார்ச்.31:** வங்கிக்குள் புகுந்து திருட முயன்று தலைமறைவாக இருந்த தனியார் நிறுவன ஊழியர் கைது செய்யப்பட்டார். சென்னை, மேற்கு மாம்பலத்தில் தனியார் வங்கி ஒன்று செயல்பட்டு வருகிறது.

வழக்கம்போல் கடந்த 4-ம் தேதி இரவு இந்த வங்கி பூட்டப்பட்டது. மறுநாள் காலை ஊழியர்கள் வந்து பார்த்தபோது, வங்கியின் ஷட்டரில் இருந்த 3 பூட்டுகள் உடைக்கப்பட்டிருந்தன.

உள்ளே புகுந்த நபர் வங்கியில் வைத்திருந்த பணம், நகைகளைத் திருட முயன்றுள்ளார். முடியாததால் வங்கி ஆவணங்களை சூறையாடிவிட்டுத் தப்பிச் சென்றது தெரியவந்தது.


கட்டிங் மெஷின்

இதுகுறித்து அசோக் நகர் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. அதன்படி அக்காவல் நிலைய குற்றப்பிரிவு போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். முதல் கட்டமாக வங்கியில் உள்ள சிசிடிவி கேமரா பதிவுகள் ஆய்வு செய்யப்பட்டன.

அதன்மூலம் வங்கியில் திருடும் முயற்சியில் ஈடுபட்டது திருவண்ணாமலை மாவட்டம், ஜமீன் கூடலூரைச் சேர்ந்த மோசஸ் சவுந்தர் (26) என்பது தெரியவந்தது. இதையடுத்து தலைமறைவாக இருந்த அவரை போலீஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

விசாரணையில் மோசஸ் சவுந்தர் மேற்கு மாம்பலம் பகுதியில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வந்ததும், இவர் வங்கியை நோட்டமிட்டு கடந்த 4-ம் தேதி இரவு கட்டிங் மெஷின் மூலம் வங்கி ஷட்டரின் பூட்டுகளை அறுத்து வங்கியில் நுழைந்து திருட முயன்றதும் தெரியவந்தது. இதையடுத்து அவர் சிறையில் அடைக்கப்பட்டார்.

# நந்தம்பாக்கத்தில் இளம் பெண்ணை மிரட்டி பணம் பறித்த இளைஞர் கைது



**நந்தம், மார்ச்.31:** நந்தம்பாக்கத்தில் இளம் பெண்ணை காதலிப்பதாக கூறி ஏமாற்றி, அவருக்கு பாலியல் தொல்லை அளித்ததை வீடியோ வாக எடுத்து மிரட்டி, பணம் பறித்த இளைஞரை போலீஸார் நேற்று கைது செய்தனர்.

குன்றத்தூரை அடுத்த நந்தம்பாக்கத்தை சேர்ந்த பெண் சென்னையில் உள்ள ஐடி நிறுவனத்தில் ஊழியராக பணிபுரிந்து வருகிறார். அப்போது அவருடன் வேலை செய்து வந்த சென்னை, கொடுங்கையூர், காந்தி தெருவை சேர்ந்த விஷ்வா (37) என்பவருடன் பழக்கம் ஏற்பட்டது. ஏற்கெனவே கணவரை விட்டுப் பிரிந்து தனியாக வசித்து வந்த அந்த பெண்ணிடம் தான் அவரை இரண்டாவதாக திருமணம் செய்து கொள்வதாக கூறி, அவரை பல்வேறு இடங்களுக்கு அழைத்துச் சென்று வந்தார். அதனை பெண்ணுக்கு தெரியாமல் விஷ்வா தனது செல்போனில் வீடியோவாக எடுத்து வைத்தார்.

மேலும், பல்வேறு வங்கிகளில் இருந்து ரூ.40 லட்சம் வரை கடன் வாங்கியுள்ளார். தான் ஏமாற்றப்பட்டதாக உணர்ந்த பெண் ரூ.40 லட்சத்தை திருப்பித் தருமாறு கேட்டார். இதனால் ஆத்திரமடைந்த விஷ்வா, இருவரும் தனியாக இருந்தபோது எடுத்த அந்தரங்க வீடியோக்களை சமூக வலைதளங்களில் விட்டு விடுவதாக் மிரட்டத் தொடங்கினார். இதையடுத்து பல்லாவரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் விஷ்வா மீது புகார் அந்த பெண் அளித்தார். போலீஸார் வழக்குப் பதிவு செய்து, விஷ்வாவை கைது செய்து தாம்பரம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி புழல் சிறையில் அடைத்தனர்.

# திருப்பாலைவனம் திருப்பாலீஸ்வரர் கோயில் திருவிழாவில் தேர் கவிழ்ந்து அர்ச்சகர் காயம்



**பொன்னேரி, மார்ச்.31:** திருப்பாலைவனம் திருப்பாலீஸ்வரர் கோயில் திருத்தேர் திருவிழாவில் தேர் கவிழ்ந்து, அர்ச்சகர் காயமடைந்த சம்பவம், பக்தர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி அருகே திருப்பாலைவனம் கிராமத்தில் அமைந்துள்ளது பழமையான லோகாம்பிகாதேவி சமேத திருப்பாலீஸ்வரர் கோயில். முதலாம் ராஜேந்திரசோழன் காலத்தில் அமைக்கப்பட்ட இக்கோயில், இந்துசமய அறநிலையத் துறையின் கீழ் உள்ளது.

இக்கோயிலில் ஆண்டுதோறும் பங்குனி உத்திர பிரம்மோற்சவம் வெகு விமரிசையாக நடைபெறுவது வழக்கம். அந்த வகையில், திருப்பாலைவனம் திருப்பாலீஸ்வரர் கோயிலில் கடந்த 23-ம் தேதி பங்குனி உத்திர பிரம்மோற்சவ விழா கொடியேற்றத்துடன் தொடங்கியது.

இவ்விழாவில், நாள்தோறும் திருப்பாலீஸ்வரர் வீதியுலா சென்று பக்தர்களுக்கு அருள் பாலித்து வந்தார். இந்நிலையில், பங்குனி உத்திர பிரம்மோற்சவ விழாவின் முக்கிய திருவிழாவான திருத்தேர் திருவிழா நேற்று காலை தொடங்கியது.

இதில், வண்ண மலர்கள், வாழை மற்றும் துணி தோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட சுமார் 22 அடி உயரம் மற்றும் 5 டன் எடைக் கொண்ட மரத்திலான திருத்தேரில் லோகாம்பிகாதேவி சமேத, திருப்பாலீஸ்வரர் எழுந்தருளி முக்கிய மாட வீதிகள் வழியாக வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்து கொண்டிருந்தார்.

பொன்னேரி, திருப்பாலைவனம், பழவேற்காடு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த திரளான பக்தர்கள் தேரை வடம் பிடித்து இழுத்து, சுவாமி தரிசனம் செய்து கொண்டிருந்த நிலையில், நேற்று பிற்பகல் தேரோட்டம் சிறிது நேரம் நிறுத்தப்பட்டு, மீண்டும் தொடங்கியது.

அப்போது, திருத்தேர், திருப்பாலைவனம் காவல் நிலையத்தை கடந்து பழவேற்காடு சாலைக்கு வரும் போது எதிர்பாராதவிதமாக சாலையில் கவிழ்ந்தது.

இதில், தேரில் இருந்த, கோயில் அர்ச்சகரான அரவிந்த் என்கிற நாகராஜ் கையில் காயமடைந்து, பொன்னேரி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

மேலும், திருவிழா பாதுகாப்பு பணியில் ஈடுபட்ட திருப்பாலைவனம் போலீஸார்,தீயணைப்பு வீரர்கள், விபத்தில் சிக்கிய தேரை மீட்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

# அம்பத்தூர் அருகே உரிய ஆவணங்களின்றி வீட்டிலிருந்த ரூ.1.22 கோடி பறிமுதல்

**ஆவடி, மார்ச்.31:** அம்பத்தூர் அருகே அண்ணா நகர் மேற்கு விரிவு, கோல்டன் குடியிருப்பு பகுதியில் உரிய ஆவணங்களின்றி வீட்டில் வைக்கப்பட்டிருந்த ரூ.1.22 கோடியை நேற்று முன் தினம் இரவு தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

தமிழக சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு, வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசு பொருட்களை அரசியல் கட்சியினர் விநியோகிப்பதை தடுக்கும் வகையில், திருவள்ளூர் மாவட்ட தேர்தல் அலுவலரின் கீழ் உள்ள கும்மிடிப்பூண்டி, மாதவரம், திருத்தணி உள்ளிட்ட 10 சட்டப்பேரவை தொகுதிகளில் தேர்தல் பறக்கும் படையினர், நிலை கண்காணிப்பு குழுவினர் தீவிர கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த வகையில், அம்பத்தூர் சட்டப்பேரவை தொகுதிக்குட்பட்ட அம்பத்தூர் அருகே அண்ணா நகர் மேற்கு விரிவு, கோல்டன் குடியிருப்பு பகுதியில் நேற்று முன் தினம் இரவு தேர்தல் தேர்தல் பறக்கும் படையினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது, அவ்வழியே இரு சக்கர வாகனத்தில் வந்த இளைஞர் ஒருவர் நிற்காமல் வேகமாக சென்று, அப்பகுதியில் உள்ள வீட்டின் முன் இரு சக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு, கைப்பையுடன் வீட்டினுள் நுழைந்தார்.

இதையடுத்து, அந்த இளைஞரை பின் தொடர்ந்து சென்ற தேர்தல் பறக்கும் படையினர் வீட்டினுள் புகுந்து, சோதனை நடத்தினர். அச்சோதனையில், கைப்பை மற்றும் வீட்டினுள் ரூ.1.22 கோடி இருந்தது.

இதுகுறித்து, தேர்தல் பறக்கும் படையினர் தீவிர விசாரணை நடத்தினர். அவ்விசாரணையில் தெரிய வந்ததாவது: அண்ணா நகர் மேற்கு விரிவு, கோல்டன் குடியிருப்பு பகுதியில் வசிக்கும் மஞ்சுநாத் என்ற இளைஞர், டாஸ்மாக் மதுபான கடைகளின் விற்பனை பணத்தை வசூலித்து, வங்கியில் செலுத்தும் நிறுவன ஊழியர். அவர் முகப்பேர் பகுதியில் உள்ள டாஸ்மாக் மது பான கடைகளில் விற்பனை தொகையை வசூலித்த தொகையோடு, தான் வசிக்கும் பகுதிக்கு சென்று கொண்டிருந்துள்ளார். அப்போது, அச்சத்தின் காரணமாக தேர்தல் பறக்கும் படையினர் சோதனைக்கு ஒத்துழைக்காமல் இரு சக்கர வாகனத்தில் வேகமாக சென்றுள்ளார்.

அவர் கைப்பை மற்றும் வீட்டினுள் வைத்திருந்த ரூ.1.22 கோடி டாஸ்மாக் மதுபான கடைகளின் விற்பனை தொகையாகும். இவ்வாறு அந்த விசாரணையில் தெரியவந்தது.

இருப்பினும், ரூ.1.22 கோடிக்கு உரிய ஆவணங்கள் இல்லாததால், அதனை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்து, அம்பத்தூர் சட்டப்பேரவை தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரும், பெருநகர சென்னை மாநகராட்சியின் அம்பத்தூர் மண்டல உதவி ஆணையருமான ஆர்.ஏ.பிரபாகரிடம் ஒப்படைத்தனர்.

# ஆதிதிராவிடர் நலப்பள்ளி ஆசிரியர்கள் ‘டெட்’ தேர்வுக்கு விண்ணப்பிக்க விரைந்து பணிச்சான்று: ஆதிதிராவிடர் நல ஆணையர் உத்தரவு




**சென்னை, மார்ச்.31:** ஆதிதிராவிடர் நலத்துறை பள்ளி, சமூகநீதி விடுதிகளில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் காப்பாளர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் காப்பாளர்கள், தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களில் தகுதித் தேர்வு (டெட்) தாள்-1 மற்றும் தாள்-2 தேர்ச்சி பெறாதவர்கள் பணியைத் தொடரவும் பதவி உயர்வு பெறவும் டெட் தேர்ச்சி கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தற்போது ஆசிரியர் தேர்வு வாரியம் டெட் தேர்வுக்கான அறிவிப்பை வெளியிட்டுள்ள நிலையில், இத்துறையில் பணியாற்றும் இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் எமிஸ் ஐடியை பயன்படுத்தி விண்ணப்பிக்கவும், எமிஸ் ஐடி இல்லாதவர்கள் பள்ளிகளில் விவரங்களைப் பதிவுசெய்து விரைவாக எமிஸ் ஐடி பெறவும் பள்ளிக்கல்வித் துறை மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, எமிஸ் ஐடி இல்லாத ஆசிரியர்கள் தாங்கள் பணிபுரியும் விடுதிக்கு அருகில் உள்ள தலைமை ஆசிரியரை அணுகி தங்களுக்கான எமிஸ் ஐடி பெறும் வகையில் தேவையான விவரங்களை எமிஸ் இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

மேலும் டெட் தேர்வு எழுதவுள்ள ஆசிரியர்களுக்குத் தேவையான ஆவணங்களைச் சரிபார்த்து உரிய படிவத்தில் விரைந்து பணிச்சான்று வழங்கவும், தேர்வுக்கு விண்ணப்பிக்க கடைசி நாள் ஏப்ரல் 10 என்பதால் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை விரைவாக விண்ணப்பிக்க அறிவுறுத்த வேண்டும் என்று அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்களுக்கும் ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் த.ஆனந்த் உத்தரவிட்டுள்ளார்.

# வணிக காஸ் சிலிண்டர் தட்டுப்பாடு எதிரொலி: ஓட்டல்களில் விறகு பயன்பாடு அதிகரிப்பால் விலை உயர்வு



**சென்னை, மார்ச்.31:** வணிக காஸ் சிலிண்டர் தட்டுப்பாடு காரணமாக ஓட்டல்களில விறகு பயன்பாடு அதிகரிப்பதால் அதன் விலை ஒரு குண்டு ரூ.320-லிருந்து ரூ.500 வரை உயர்ந்துள்ளது.

அமெரிக்கா- ஈரான் இடையிலான போர் காரணமாக இந்தியா முழுவதும் சமையல் காஸ் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வணிக சிலிண்டர்கள் கிடைப்பது அரிதாகிவிட்டது. ஊரகப் பகுதிகளில் வீட்டு உபயோக சிலிண்டர் பதிவு செய்து பல நாட்கள் காத்து கிடக்கின்றனர்.

அடுத்த சிலிண்டர் பதிவு செய்வதற்கான இடைவெளி 21 நாட்களாக இருந்தது, நகர்ப்புறங்களில் 25 நாட்களாகவும், ஊரக பகுதிகளில் 45 நாட்களாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

வீட்டு உபயோக சிலிண்டரை நிரப்புவதற்கு பதிவு செய்ய ஐவிஆர்எஸ், ஆயில் நிறுவன செயலி, மிஸ்டு கால் என பல்வேறு முறைகளில் முயன்றும் பதிவு செய்ய முடியவில்லை என பொது மக்கள் புகார் தெரிவித்து வருகின்றனர்.

வணிக சமையல் காஸ் கிடைக்காததால், பல ஓட்டல்கள் மூடப்பட்டன. சில ஓட்டல்களில் உணவு தயாரிப்பு அளவு குறைப்பு, 4 வகை பொரியல், 3 வகை சட்னி கொடுக்காமல் ஒரே வகை பொரியல், சட்னி கொடுப்பது என சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

சில ஓட்டல்கள் விறகு அடுப்புகளை பயன்படுத்தி உணவு தயாரித்து வருகின்றன. மேலும் மாணவர் தங்கும் விடுதிகள், பயணியர் தங்கும் விடுதிகள், தரை தளம் மட்டும் கொண்ட தனி வீடுகள் போன்றவற்றில் சுடுதண்ணீர் காய வைக்கவும், டீக்கடைகள் பலவற்றிலும் விறகு அடுப்புகளை பயன்படுத்த தொடங்கியுள்ளனர்.

இதனால் சென்னையில் விறகு அடுப்புகளின் பயன்பாடு அதிகரித்திருப்பதோடு, விறகுகள் பயன்பாடு அதிகரித்து, அதன் விலை உயர்ந்துள்ளது. சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகளில் 3 சக்கர சைக்கிள்களில் சிறு கடைகளுக்கு விறகுகள் கொண்டு செல்வது அதிகரித்துள்ளது.

இது தொடர்பாக மூலக்கொத்தளம் பகுதியை சேர்ந்த மர வியாபாரிகளிடம் கேட்டபோது, “இதற்கு முன்பு ஒரு குண்டு (25 கிலோ) சவுக்கு விறகு கிலோ ரூ.320 முதல் ரூ.350 வரை விற்கப்பட்டது.

இப்போது பெரிய ஓட்டல்காரர்கள் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள சவுக்கு தோப்புகளுக்கு நேரடியாக சென்று விறகுகளை வாங்க தொடங்கியுள்ளனர்.

இதனால் விறகு பற்றாக்குறை ஏற்பட்டு ஒரு குண்டு இப்போது ரூ.500 வரை உயர்ந்துள்ளது. உயர்ந்துள்ளது. வரும் நாட்களில் மேலும் உயர வாய்ப்புள்ளது” என்றனர்.

# ஒருங்கிணைந்த தொழில்நுட்பப் பணிகள் தேர்வு: சான்றிதழை முழுமையாக பதிவேற்ற தேர்வர்களுக்கு அவகாசம்




**சென்னை, மார்ச் .31:** நேர்காணல் இல்லாத பதவிகளை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த தொழில்நுட்பப் பணிகள் தேர்வில் சான்றிதழ்களை முழுமையாகப் பதிவேற்றம் செய்ய தேர்வர்களுக்கு கால அவகாசம் அளிக்கப்பட்டுள்ளதாக டிஎன்பிஎஸ்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக டிஎன்பிஎஸ்சி செயலாளர் பானோத் ம்ருகேந்தர் லால் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கடந்த ஆகஸ்ட் மாதம் நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த தொழில்நுட்பப் பணிகள் தேர்வில் (நேர்காணல் இல்லாத பதவிகள்) தேர்வர்களால் பதிவேற்றம் செய்யப்பட்ட சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டன.

அப்போது சில தேர்வர்கள் ஒரு சில சான்றிதழ்களை முழுமையாகவும், சரியாகவும் பதிவேற்றம் செய்யாமல் குறைபாட்டுடன் வைத்திருப்பது கண்டறியப்பட்டது. எனவே, அத்தகைய தேர்வர்கள் விடுபட்ட சான்றிதழ்களை முழுமையாகப் பதிவேற்றம் செய்யவும், குறைகளை சரிசெய்யவும் ஏப்ரல் 6-ம் தேதி வரை இறுதி வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

அந்த தேர்வர்களின் பதிவெண்கள் அடங்கிய பட்டியல் தேர்வாணையத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக அவர்களுக்கு குறுஞ்செய்தி, மின்னஞ்சல் வாயிலாக தகவலும் அனுப்பப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் சான்றிதழ்களை பதிவேற்றம் செய்யாத தேர்வர்களின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள மற்றொரு செய்திக்குறிப்பில், “ஒருங்கிணைந்த தொழில்நுட்பப் பணிகள் தேர்வில் (நேர்முகத் தேர்வு பதவிகள்) இடம் பெற்றுள்ள பதவிகளுக்கான தேர்வுகள் மார்ச் 7 மற்றும் 8-ம் தேதி நடத்தப்பட்டன.

தற்போது கட்டாய தமிழ் மொழி தகுதித்தாள் தேர்வு மற்றும் வேளாண்மை, வணிக நிர்வாகம், எலெக்ட்ரிக்கல் மற்றும் எலெக்ட்ரானிக்ஸ் இன்ஜினீயரிங், நிதி மற்றும் செலவுக் கணக்கு, சட்டம், மெக்கானிக்கல், உற்பத்தி பொறியியல் ஆகிய பாடங்களுக்கான உத்தேச விடைகள் (கீ ஆன்ஸர்) தேர்வாணையத்தின் இணையதளத்தில் (www.tnpsc.gov.in) வெளியிடப்பட்டுள்ளன.

தேர்வர்கள் உத்தேச விடைகள் மீது இணையவழியாக ஏப்ரல் 3-ம் தேதி வரை முறையீடு செய்யலாம். அஞ்சல் வழியாகவும், மின்னஞ்சல் வாயிலாகவும் பெறப்படும் முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது” என்று கூறியுள்ளார்.



திருஎவ்வுள் ஸ்ரீவைத்ய வீரராகவ பெருமாள் ~தவன உத்ஸவம் ~ மூன்றாம் நாள் ~ சேர்த்தி.




கோவை சுந்தராபுரத்தில் உள்ள செங்கப்ப கோனார் திருமண மண்டபத்தில் கோவை வெண்ணிலா மன்றம் சார்பில் நடைபெற்ற இலக்கியத் திருவிழா - 2026ல் "எழுத்துச் சித்தர். முகில் தினகரன் " அவர்களுக்கு "இயற்றமிழ் வித்தகர் விருது" தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் முன்னாள் இயக்குனர் முனைவர். ஆர். விஜயராகவன் அவர்கள் கையால் வழங்கப்பட்டது.

# "என்றும் மகிழ்வோம் எந்தமிழ் சிந்தனையில்" எனும் தலைப்பில் கவியரங்கம்



**சென்னை, மார்ச்.31:** மாமதுரைக் கவிஞர் பேரவை- சிந்தனைக் கவியரங்கம்- மாமதுரைக் கவிஞர் பேரவை- சிந்தனைக் கவியரங்கம், மதுரை, வடக்கு மாசி வீதி, மணியம்மை மழலையர் &தொடக்கப் பள்ளியில் நடந்தது. "என்றும் மகிழ்வோம் எந்தமிழ் சிந்தனையில் " எனும் தலைப்பில் கவியரங்கம் நடந்தது. தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்ச்சி தொடங்கியது.

மன்றத்தின் செயலர் தமிழ்ச்செம்மல் கவிஞர் இரா .இரவி தலைமையில் கவியரங்கம் நடந்தது. ஆலோசகர் வீர ஆதிசிவத் தென்னவன் வரவேற்றார் .பொருளாளர் கவிஞர் இரா . கல்யாணசுந்தரம்,துணைத் தலைவர் முனைவர் வரதராஜன் முன்னிலை வகித்தனர் .பன்னாட்டு தமிழுறவு மன்றம் தனசிங் மனோகரன் வாழ்த்துரை வழங்கினார். துணைச்செயலர் கு .கி . கங்காதரன் நன்றி கூறினார் .

கவிஞர் இரா .இரவி தலைமையில் கவிஞர்கள் ,இரா. கல்யாணசுந்தரம்,முனைவர் வரதராஜன் ,கு .கி . கங்காதரன் ,கு .பால் பேரின்பநாதன் , கி .கோ .குறளடியான் , அ.அழகையா, , பா .பழனி,மா,முனியாண்டி,பா .பொன்பாண்டி , ந .சுந்தரம் பாண்டி ,ச .லிங்கம்மாள், ச .கமலா சந்திரசேகர் ,அஞ்சூரியா க . ஜெயராமன் ,முனைவர் வீரைமைதீன்( நெல்லை ),வழக்கறிஞர் சந்தான கிருஷ்ணன் ,சு.. பாலகிருஷ்ணன்,முனைவர் பா .ஸ்ரீ வித்யாபாரதி ,சிறுமி ஸ்ரீஜா ,போ .சிவசத்யா மா .பரமானந்தம் ஆகியோர் கவிதை பாடினார்கள்.

பேரவையின் சார்பில் சிறப்பாக கவிதை பாடிய கவிஞர்கள் ச .கமலா சந்திரசேகர், முனைவர் வீரைமைதீன்,வழக்கறிஞர் சந்தான கிருஷ்ணன்,சிறுமி ஸ்ரீஜா ஆகியோருக்கு தமிழறிஞர் அழகுராசன் வழங்கிய திருக்குறள் முனுசாமி எழுதிய திருக்குறள் உரை நூல்,முனைவர் வரதராசன் எழுதிய நூல் பரிசாக வழங்கி கவிமாமணி தென்னவன் நினைவு விருதும் வழங்கினார்கள்.

கவிதாயினி ச .லிங்கம்மாள் எழுதிய "தாயின் கவிதைகள் " கவிதை நூலை வெளியிட்டனர் . நூல் ஆசிரியருக்கு பொன்னாடைப் போர்த்தி கவிமாமணி தென்னவன் நினைவு விருதும் வழங்கினார்கள் .வருகை தந்த அனைவருக்கும் கவிதைநூலை நண்கொடையாக வழங்கினார்.

கவியரங்கம் நடத்துவதற்கு மாதாமாதம் மணியம்மை பள்ளியை இலவசமாகத் தந்து உதவும் புரட்சிப் பாவலர் மன்றத்தின் தலைவர் பி . வரதராசன் அவர்களுக்கு அனைவரும் நன்றி கூறினார்கள்.

# தர்மபுரியில் வெயில் அதிகரிப்பால் நுங்கு விற்பனை ஜோர்



**தர்மபுரி, மார்ச்.31:** தர்மபுரியில், வெயில் அதிகரிப்பால் நுங்கு விற்பனை ஜோராக நடந்து வருகிறது.தர்மபுரி மாவட்டத்தில், கடந்த இரண்டு மாதமாக கோடை வெயில் கடுமையாக வாட்டி வருகிறது. கடந்த சில நாட்களாக 95 டிகிரியை கடந்து, நேற்று முன்தினம் 99.5 டிகிரியாக நிலவியது.

அனல் காற்றை வீசி வரும் நிலையில், கடந்த 3 நாட்களுக்கு முன்பு 100 டிகிரி பாரன்ஹீட் வெயில் பதிவானது. இதனால், பகல் நேரங்களில் வெளியில் வராமல், பொதுமக்கள் வீடுகளிலேயே முடங்கினர்.

தங்களின் உடல் சூட்டை தணிக்க, பழ வகைகள், இயற்கை குளிர்பானங்களை பருகுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். தர்மபுரி மாவட்டத்திற்கு சேலம் மாவட்டம் மேச்சேரி, மேட்டூர் பகுதிகளில் இருந்து நுங்கு விற்பனைக்கு அதிகம் கொண்டு வரப்படுகிறது.

கடந்தாண்டு ஏராளமான பனை மரங்கள் தொடர்ந்து வெட்டப்பட்டு வருவதால், பனைமரங்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டது. மேலும் பதநீர் இறக்குவதற்காக விடப்படுவதாலும், நுங்கு வரத்து குறைந்துள்ளது.

இந்நிலையில், தர்மபுரி நெசவாளர் நகர் மற்றும் இலக்கியம்பட்டி ஆகிய இடங்களில் குறைந்த அளவிலான வியாபாரிகளே நுங்கு விற்பனை செய்கின்றனர். நடப்பாண்டில் 6 நுங்குகள் ரூ.50க்கு விற்பனை செய்யப்படுகிறது. கடந்தாண்டு 3 நுங்குகள் ரூ.20க்கு விற்பனையானது.

# மணல் கடத்தலால் அரசுக்கு ரூ.1,000 கோடி இழப்பு: மணல் லாரி உரிமையாளர்கள் சம்மேளனம் குற்றச்சாட்டு

**நாமக்கல், மார்ச்.31:** தமிழகத்தில் சட்ட விரோதமாக மணல் மற்றும் கிராவல் எடுப்பதால் அரசுக்கு ரூ. 1,000 கோடி அளவுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது, என தமிழ்நாடு மணல் லாரி உரிமையாளர்கள் சம்மேளன தலைவர் செல்ல.ராசாமணி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் நாமக்கல்லில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: மயிலாடுதுறை, திருச்சி, கோவை, திருப்பூர், ஈரோடு, மதுரை உள்ளிட்ட மாவட்டங்களில் கிராவல் மண் எடுக்கும் பணிகளில் கடந்த 2 ஆண்டுகளாக பெரும் அளவில் சட்டவிரோத செயல்பாடுகள் நடைபெற்று வருகிறது. இந்த முறைகேடுகளுக்கு மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த தனிநபர் தலைமையேற்று பல பினாமிகள் பெயரில் மாநிலம் முழுவதும் கிராவல் மண் எடுக்கும் உரிமைகளை பெற்றுள்ளார்.

அவ்வாறு அனுமதி பெற்ற பட்டா நிலங்களோடு மட்டுமல்லாமல், அனுமதி பெறாத பட்டா நிலங்கள் மற்றும் அரசு புறம்போக்கு நிலங்களிலும் சட்டவிரோதமாக மணல் மற்றும் கிராவல் எடுப்பது நடைபெற்று வருகிறது.

அதிகப்படியான அளவில் தினசரி ஆயிரக்கணக்கான லாரிகளில் கிராவல் மண் எடுக்கப்பட்டு கடத்தப்படுகிறது. குறிப்பாக அனுமதி அளிக்கப்பட்ட 40 மீட்டர் ஆழத்துக்கு மாறாக அதற்கு மீறிய ஆழத்திலும் மண் வெட்டி எடுக்கப்படுகிறது.

மேலும், போலியான அனுமதி சீட்டுகள் பயன்படுத்தப்படுவதால், உண்மையான லாரி உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுநர்கள் சிக்கி கைது செய்யப்படுகின்றனர். இத்துடன், கனிமத் துறை அதிகாரிகளுக்கும் புகார் அளித்தாலும், அவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பதில்லை.

இதன் மூலம் தமிழக அரசுக்கு ரூ.1,000 கோடி அளவுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த முறைகேட்டில் ஈடுபட்டதாக கூறப்படும் நபர்கள் மற்றும் அவர்களுக்கு துணைபுரிந்த அரசு அதிகாரிகள் மீதும் அரசு கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு கூறினார்.




## பாஜக வேட்பாளர் பட்டியல் வெளியாகும் முன்பாகவே மயிலாப்பூரில் களப்பணியைத் தொடங்கிய தமிழிசை



**சென்னை, மார்ச்.31:** பாஜக வேட்பாளர் பட்டியல் வெளியாவதற்கு முன்பாகவே, மயிலாப்பூரில் களப்பணியை தீவிரப்படுத்தியுள்ளார் தமிழிசை சவுந்தரராஜன். கபாலீஸ்வரர் பங்குனித் தேரோட்ட விழாவில் நேற்று அவர் உற்சாகத்துடன் கலந்துகொண்டார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது. தொகுதிப் பங்கீடு, வேட்பாளர் தேர்வில் அரசியல் கட்சிகள் மும்முரம் காட்டி வருகின்றன. தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பாஜக 28 தொகுதிகளில் போட்டியிடுகிறது.

சென்னையின் முக்கிய அடையாளமான மயிலாப்பூர் தொகுதி அக்கட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மயிலாப்பூர் தொகுதி பாஜகவுக்கு என உறுதியான அன்றே, அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமியுடன் பிரச்சார வாகனத்தில் தமிழக பாஜக முன்னாள் தலைவர் தமிழிசை சவுந்தரராஜனும் வலம் வந்தார்.


பாஜக வேட்பாளர் பட்டியல் அறிவிக்கப்படும் முன்பே பிரச்சாரத்துக்கு வந்தது குறித்து கேட்டதற்கு, தொகுதி பொறுப்பாளர் என்ற முறையில் பங்கேற்றதாக தெரிவித்தார். ஆனாலும், தொடர்ந்து மயிலாப்பூரில் பல்வேறு நிகழ்வுகளிலும் அவர் பங்கேற்று வருகிறார்.

மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயில் பங்குனித் தேரோட்ட உற்சவம் நேற்று நடைபெற்றது. அப்போது, மக்கள் கூட்டத்துக்கு இடையே கட்சித் தொண்டர் ஒருவரது இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து தமிழிசை அங்கு வந்ததை மக்கள் வியப்புடன் பார்த்தனர்.

பின்னர், மாட வீதிகளில் வலம் வந்த தமிழிசை, பக்தர்களுடன் கலந்துரையாடினார். இளைஞர்கள், பொதுமக்களுடன் செல்ஃபி எடுத்துக் கொண்டார். தேரோட்டத் திருவிழாவைத் தொடர்ந்து, கட்சியின் மத்திய மண்டல நிர்வாகிகள் மற்றும் பொதுமக்களுடன் இணைந்து பிரதமரின் 'மனதின் குரல்' நிகழ்ச்சியில் தமிழிசை பங்கேற்றார்.

இதெல்லாம் பார்க்கும்போது, மயிலாப்பூர் தொகுதி வேட்பாளராக தமிழிசை சவுந்தரராஜன் அறிவிக்கப்படவே அதிக வாய்ப்பு இருப்பதாக தெரிகிறது. மயிலாப்பூரில் அவர் ஏற்கெனவே பிரச்சாரத்தை தொடங்கி விட்டனர் என்கின்றனர் கட்சித் தொண்டர்கள்.

## பாமக வேட்பாளர் பட்டியல் வெளியீடு: தருமபுரியில் சவுமியா அன்புமணி; பெரம்பூரில் திலகபாமா போட்டி




**சென்னை, மார்ச்.31:** பாமகவின் முழுமையான வேட்பாளர் பட்டியல் வெளியாகியுள்ளது. தருமபுரியில் சவுமியா அன்புமணி போட்டியிடும் நிலையில், திருமாவளவன் போட்டியிடும் காட்டுமன்னார் கோவிலில் பாமக வேட்பாளராக மருத்துவர் அன்பு.சோழன் களமிறங்குகிறார். விஜய் களம் காணும் பெரம்பூரில் திலகபாமா போட்டியிடுகிறார்.

இதுகுறித்து பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்ட அறிக்கையில், "தமிழ்நாடு சட்டப்பேரவைக்கு வரும் 23.04.2026-ம் நாள் நடைபெறவிருக்கும் தேர்தலில், அ.இ.அ.தி.மு.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பாட்டாளி மக்கள் கட்சிக்கு 18 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அவற்றில் 3 தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், மீதமுள்ள 15 தொகுதிகளில் கீழ்க்கண்டவர்கள் வேட்பாளர்களாக போட்டியிடுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1. பெரம்பூர் -ம. திலகபாமா
2. தருமபுரி - சவுமியா அன்புமணி,
3. விருத்தாசலம் - மருத்துவர் தமிழரசி ஆதிமூலம்,
4. சேலம் மேற்கு - மு. கார்த்தி,
5. பென்னாகரம் - பாடி வெ. செல்வம்,
6. போளூர் - சி.ஆர். பாஸ்கரன்,
7. திருப்போரூர் - வழக்கறிஞர் கே.பாலு,
8. ஜெயங்கொண்டம் - க. வைத்தி,
9. சேலம் வடக்கு - எஸ். சதாசிவம்,
10. விக்கிரவாண்டி - சி. சிவக்குமார்,
11. சோளிங்கர் - க. சரவணன்,
12. மயிலாடுதுறை சித்தமல்லி ஏ. பழனிச்சாமி,
13. உத்திரமேரூர் - பெ. மகேஷ்குமார்,
14. ரிஷிவந்தியம் - அ.ப. செழியன்,
15. காட்டுமன்னார் கோயில் (தனி) - மருத்துவர் அன்பு. சோழன் ஆகியோர் போட்டியிடுகின்றனர்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட 3 பாமக வேட்பாளர்கள்
1. கீழ்வேளூர் - ச. வடிவேல் இராவணன்
2. அம்பத்தூர் - கே.என். சேகர்
3. செஞ்சி - அ. கணேஷ் குமார்

# திருச்சி சமயபுரம் மாரியம்மன் கோயில் மண்டப மேற்கூரை இடிந்து விழுந்ததில் பெண் பக்தர் உயிரிழப்பு



**திருச்சி, மார்ச்.31:** திருச்சி சமயபுரம் மாரியம்மன் கோயில் மண்டப மேற்கூரை நேற்று இடிந்து விழுந்ததில் பெண் பக்தர் உயிரிழந்தார். காயமடைந்த தாய், மகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திருச்சி மாவட்டம் சமயபுரம் மாரியம்மன் கோயில் பூச்சொரிதல் விழா கடந்த 4 வாரங்களாக நடைபெற்று வருகிறது. இதில் வாரந்தோறும் ஞாயிறுக்கிழமை அன்று பூச்சொரிதல் விழா விமரிசையாக நடைபெறும்.

அதன்படி, 4-வது வாரமாக பூச்சொரிதல் விழா நேற்று நடைபெற்றது. இதற்காக உள்ளூர், வெளி மாவட்ட பக்தர்கள் நேற்று முன்தினம் இரவே வந்து கோயில் வளாகத்தில் தங்கினர்.

இதில், திருவையாறு, செபாஸ்தியார் கோயில் தெருவைச் சேர்ந்த மோகன் மனைவி நதியா (32), அவரது உறவினர்களான தஞ்சாவூர் மாவட்டம் கள்ளப்பெரம்பூர் மாதாக்கோவில் தெருவைச்சேர்ந்த சண்முகசுந்தரம் மனைவி ரஞ்சனி (35), அவரது மகள் பாபிக்ஷா(14) ஆகியோரும் கோயிலுக்கு நேற்று முன்தினம் இரவு வந்து கோயில் சந்நிதி வீதியில் உள்ள நுழைவு வாயில் மண்டபத்தில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தனர்.

இந்நிலையில், நேற்று அதிகாலை 2 மணி அளவில் மண்டபத்தின் கான்கிரீட் மேற்கூரை சுவர் இடிந்து கீழே உறங்கிக் கொண்டிருந்த நதியா உள்ளிட்ட 3 பேர் மீதும் விழுந்தது. இதில், பலத்தகாயமடைந்த நதியா அந்த இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். மேலும், பலத்த காயமடைந்த ரஞ்சனி மற்றும் பாபிக்ஷா ஆகியோரை அங்கிருந்த மற்ற பக்தர்கள் மீட்டு, உடனடியாக ஆம்புலன்ஸ் உதவியுடன் திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.தகவலறிந்த சமயபுரம் காவல் ஆய்வாளர் தண்டபாணி தலைமையிலான போலீஸார், அங்கு விரைந்து வந்து நதியாவின் உடலை பிரேத பரிசோதனைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும், இதுகுறித்து வழக்குப் பதிவு செய்து விசாரிக்கின்றனர்.

சமயபுரம் கோயில் இணை ஆணையர் சூரியநாராயணன் மற்றும் கோயில் அலுவலர்கள் விரைந்து வந்து மேற்கூரை இடிந்து விழுந்த மண்டப பகுதியை பார்வையிட்டனர். இச்சம்பவத்தை தொடர்ந்து, கோயிலின் கிழக்கு நுழைவுவாயில் மண்டபப் பகுதி இரும்பு தடுப்புகள் வைத்து அடைக்கப்பட்டது. வடக்கு வாசல், தெற்கு வாசல் வழியாக பக்தர்கள் உள்ளே அனுமதிக்கப்பட்டனர். மேற்கு வாசல் வழியாக பக்தர்கள் வெளியே செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அண்ணாமலை கண்டனம்

இதனிடையே இந்த விவகாரத்தில் அமைச்சர் சேகர்பாபு பதில் சொல்லியே தீர வேண்டும் என பாஜக முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை கண்டனம் தெரிவித்துள்ளார். இதுகுறித்த அவரது எக்ஸ் தள பதிவு:

இக்கோயிலில் கும்பாபிஷேகம் நடந்து நான்கு ஆண்டுகள் கூட முழுமை பெறவில்லை. இந்த நிலையில், கோவில் மண்டபத்தின் மேற்கூரை இடிந்து விழுவது என்பது திமுக அரசு, எந்த லட்சணத்தில், ஆலயத் திருப்பணிகளை மேற்கொண்டு வருகிறது என்பதற்கான வெளிப்படையான சான்றாகும்.

திமுக அரசு பக்தர்களின் உயிரை துச்சமாக நினைக்கிறது என்பது இதன்மூலம் தெரியவருகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில், இவர்கள் செய்த அனைத்து ஆலயத் திருப்பணிகளையும் ஆய்வு செய்ய வேண்டும்.

இந்த துயர சம்பவத்துக்குப் பின்னணியில் உள்ள அனைவரின் மீதும், கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அமைச்சர் சேகர்பாபு, பக்தர்களின் பாதுகாப்பை உறுதி செய்யத் தவறியதற்கு பதில் சொல்லியே தீர வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM